TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
LAID ON THE TABLE OF THE
HOUSE ON
29 MAR 1984

தமிழ்நாடு சட்ட மன்றம்

மன்றத்தில் வைக்கப்படும் அறிக்கை

சேலம் நகர இச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் உள்ள "லாக்கப்"
அறையில் 1983ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15ஆம் நாளன்று
தெய்வமணி என்ற குள்ளுண்டு இறந்து போனது பற்றி
"ஒரு நபர் கமிஷன்" அறிக்கை

ஓய்வு பெற்ற மாவட்ட நீதிபதி

திரு. ஏ. எம். நஞ்சப்பன்


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சேலம் நகர கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் உள்ள ' லாக்கப் ' அறையில் 15-3-1983 அன்று தெய்வமணி என்கிற குள்ளுண்டு இறந்துபோனது பற்றி தமிழ்நாடு அரசுக்கு ' ஒரு நபர் கமிஷன் ' சமர்ப்பித்துள்ள அறிக்கை.

தெய்வமணி என்கிற குள்ளுண்டு (சுருக்கமாக இனி இவளை தெய்வமணி என்றே சொல்லலாம்) கிச்சிப்பாளையத்திலுள்ள கஸ்தூரிபாய் தெருவில் அவளுடைய தாயார் குட்டியம்மாளுடன் வசித்து வந்தாள். இறக்கும்போது அவளுக்கு சுமார் 19 வயது. கல்யாணம் ஆகவில்லை. அவளுடைய தாயார் கிச்சிப்பாளையத்திலுள்ள சன்னியாசி குண்டு ரோட்டில் உள்ள கம்பளம் நெய்யும் ஆலையில் வேலை பார்த்து வருகிறார். பி. சா. 1 திருமதி பேச்சியம்மாள் அதே தெருவில் குடியிருந்து வருகிறாள். இவள் காய்கறி வியாபாரம் செய்து வருகிறாள். இவள் வீடு தெய்வமணியின் வீட்டிலிருந்து 10 வீடுகள் தள்ளி இருக்கிறது.

2. 15–3–1983 அன்று காலை சுமார் 6 மணியளவில் பி. சா. 1-ன் வீட்டில் 6 எவர் சில்வர் டம்பளர்களும், ஒரு எவர்சில்வர் தட்டும், மற்றும் ஒரு எவர்சில்வர் பாத்திரமும் காணாமல் போய் விட்டன. அதுபற்றி காலை சுமார் 7-30 மணியளவில் அவள் வீட்டில் நிட்டிக்கொண்டிருந்தாள். அவ்வாறு நிட்டிக்கொண்டிருப்பதைக் கேட்டு அக்கம் பக்கத்திலுள்ள சரசா, பானு, மகேஸ்வரி, கலிலா, மாரிமுத்து ஆகியோர்கள் தெய்வமணி மேற்சொன்ன சாமான்களை எடுத்துக்கொண்டு போய்விட்டதைப் பார்த்ததாக பி. சா. 1 இடம் சொன்னார்கள். காணாமல் போயிருந்த எவர் சில்வர் தட்டை தெய்வமணி ஒரு பெருமாயிடம் அடகு வைத்திருந்தாள். பி. சா. 1 அந்தபெருமாயியிடம் தெய்வமணியை அழைத்துச் சென்று பணத்தைக் கொடுத்துவிட்டு அந்த எவர்சில்வர் தட்டை திருப்பி வாங்கிக்கொண்டாள். அதன் பிறகு தெய்வமணியை அந்த எவர்சில்வர் தட்டுடன் பி. சா. 1 தன்னுடைய வீட்டிற்கு அழைத்துச் சென்றாள். தெய்வமணி மற்ற காணாமல் போன பாத்திரங்களையும் வாங்கித் தருவதாகச் சொன்னாள். அது சமயம் அக்கம்பக்கத்திலுள்ளவர்கள் தங்கள் வீடுகளிலிருந்தும் அவ்வாறுதான் சாமான்கள் திருட்டுப்போய்விட்டன என்றும் தெய்வமணியை காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று புகார் கொடுக்கும்படியும் கூறினார்கள்.

3. அதன் பிறகு, பி. சா. 1 தெய்வமணியை அங்கிருந்தவர்களிடம் தன்னுடைய வீட்டிலேயே விட்டு விட்டு, தான் மட்டும் சுமார் இரண்டு பர்லாங் தூரத்திலுள்ள கிச்சிப்பாளையம் காவல் நிலையத்திற்குச் சென்று அங்கிருந்த உதவி ஆய்வாளர் எ. சா. 5 திரு. ரங்கசாமியிடம் தெய்வமணி தன்னுடைய எவர்சில்வர் தட்டை திருடியது பற்றிச் சொன்னாள். உதவி ஆய்வாளரிடம் அவ்வாறு சொல்லும்போது காவலர் மோகன்ராம் (எ. சா. 3) மற்றும் சுமார் 6 காவலர்களும் காவல் நிலையத்தில் இருந்தார்கள். காவலர் மோகன்ராம் (எ. சா. 3) வெளியில் வந்து பி. சா. 1 இடம் என்ன நடந்தது என்று விசாரித்தார். அவரிடம் அவள் தெய்வமணி எவர்சில்வர் தட்டைத் திருடியது பற்றிச் சொன்னாள். அதற்கு அவர் தெய்வமணி ரொம்ப நாட்களாக திருடிக் கொண்டிருக்கிறாள் என்றும், அவளைப் பிடிக்க வேண்டும் என்றும் சொன்னார். அதன் பிறகு மோகன்ராம் (எ. சா. 3) பி. சா. 1-உடன் அவளுடைய வீட்டிற்குச் சென்று தெய்வமணியை காவல் நிலையத்திற்கு அழைத்துவந்தார். காவல் நிலையத்திற்கு வரும்போது தெய்வமணி சாம்பல் நிற விளிய ஸ்பரில் வைத்த பாவாடையும், தாவணியும் அணிந்திருந்தாள் என்று பி. சா. 1 தன்னுடைய சாட்சியத்தில் கூறுகிறார். அப்போது திருட்டுப்போன எவர்சில்வர் தட்டு தெய்வமணி கையில் இருந்தது. பி. சா. 1-ம், பி.சா. 1-ன் மாமியார் அங்கம்மாளும் மற்றும் சிங்குணம்மாள், கலைராசம் ஆகியோர்கள் தெய்வமணியுடன் காவல் நிலையத்திற்குச் சென்றார்கள். காவல் நிலையத்தில் பி. சா. 1 எவர்சில்வர் தட்டு கிடைத்தது பற்றியும் மற்ற சாமான்கள் கிடைக்காமல் இருப்பது பற்றியும் சொன்னாள். அவள் சொன்னதை பெயர் தெரியாத காவலர் ஒருவர் எழுதிக் கொண்டார். அவரை இப்போது அடையாளம் காட்ட முடியாது என்று பி. சா. 1 சொல்கிறார். அவ்வாறு அவள் கொடுத்த புகார் சா. ஆ. பி. 1 ஆகும். சா.ஆ. பி. 1 புகார் கொடுக்கும்போது பகல் சுமார் 12 மணி இருக்கும். சா. ஆ. பி. 1 புகாரை உதவி ஆய்வாளர் (எ. சா. 5) கிச்சிப்பாளையம் காவல் நிலைய குற்ற எண் 209 எக்ஸ் 47/83-ன் கீழ் இ.த.ச. 380-வது பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்துக்கொண்டார்.

4. சா.ஆ.பி. 1 புகார் கொடுத்தவுடன் காணாமல்போன எவர்சில்வர் தட்டை உதவி ஆய்வாளர் (எ.சா. 5) சா.ஆ. பி. 2 நமூனா 95 மூலம் கைப்பற்றிக்கொண்டார். அதில் பி.சா.1 கையெழுத்து போட்டுள்ளார். அதன்பிறகு உதவி ஆய்வாளர் பி. சா. 1 சாட்சியையும் மற்றும் அவளுடன் வந்தவர்களையும், தெய்வமணியையும் விசாரித்தார். தெய்வமணி குற்றத்தை ஒப்புக் கொண்டார்.

5. மேற்சொல்லியபடி பி.சா. 1-ஐயும் மற்றவர்களையும் காவல் நிலையத்திலேயே விசாரித்த பிறகு, உதவி ஆய்வாளர் (எ. சா. 5) தலைமைக்

காவலர் கணேசனிடமும், காவலர் சின்னுச்சாமியிடமும் தான் கைது செய்த தெய்வமணியை நேரே பரிசோதனை செய்த பிறகு காவல் நிலையத்திலுள்ள 'லாக்கப்' அறையில் அடைத்து விடும்படி சொன்னார். அதன்பேரில் அப்போது அங்கிருந்த பி. சார். 6 செல்லம்மாள் தெய்வமணியை அழைத்துச்சென்று நேரே பரிசோதனை செய்து கூட்டி வந்தாள். இதுபற்றி, பி. சார். 6 காவல் நிலையத்தில் உள்ள 'சர்ச் ரிஜிஸ்தரில்' (Search Regist r) கையெழுத்து போட்டாள். அது சார். ஆ. பி. 21 ஆகும். தெய்வமணியை காவலர்கள் உடனே 'லாக்கப்' ரூமில் அடைத்து பூட்டினார்கள். அவ்வாறு பூட்டியபிறகு, அந்த பூட்டின் சாவி காவலர் எ. சார். 4 பெருமாளிடம் ஒப்படைக்கப்பட்டது. பி. சார். 6 செல்லம்மாள் இச்சிப் பாளையம் காவல் நிலையத்தில் துப்புரவு வேலை செய்து வருகிறாள்.

6. தெய்வமணியை 'லாக்கப்' அறையில் அடைத்துப் பூட்டிய பிறகு பி.சார். 1-ஐ அவருடைய வீட்டிற்குப் போய்விட்டுவரும்படி சொன்னார்கள். அதன்படி பி. சார். 1 தன்னுடைய வீட்டிற்குப் போய்விட்ட பிறகு என்ன நடந்தது என்று தெரிந்து கொள்ள காவல் நிலையத்திற்கு அன்று பிற்பகல் சுமார் 2 மணிக்குத் திரும்பவும் வந்தார். அப்போது காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளர் எ. சார். 5 ரங்கசாமியும், எ. சார். 3 மோகன்ராமும் மற்றும் ஒரு காவலர் சின்னுசாமியும் இருந்தார்கள். அப்போது தெய்வமணியை காவல் நிலையத்திற்குள் இரு மேஜைகளுக்கு மத்தியில் வைத்து விசாரித்துக்கொண்டிருந்தார்கள். விசாரணையின்போது தெய்வமணி உள்ளதைச் சொல்லவில்லையென்று தடிக்கொண்டு எ. சார். 3 மோகன்ராமும் அவளை அடித்தார்; காவலர் சின்னுச்சாமி காலால் அவளை உதைத்தார். அவ்வாறு அடித்தவுடன் தெய்வமணி தன்னை அடிக்க வேண்டாம் என்றும், உண்மையைச் சொல்லிவிடுகிறேன் என்றும், காளிப்பட்டியில் இருக்கும் தன் மாமன் சொல்லித்தான் தான் அவ்வாறு நடந்துக் கொண்டதாகச் சொன்னாள். அதன் பிறகு எ. சார். 3 மோகன்ராமும், காவலர்கள் ராமசாமி, சின்னுச்சாமி ஆகியோர்கள் பி. சார். 1-ஐப் பார்த்து உதவி ஆய்வாளர் இல்லையென்றும் வீட்டிற்குப் போய்விட்ட மறுநாள் காலை வரும்படியும் கூறினார்கள். அதன்பிறகு பி. சார். 1 அங்கிருந்து தன்னுடைய வீட்டிற்குப் போய்விட்டான்.

7. பி. சார். 2 சத்தார் என்பவர் இறந்துபோன தெய்வமணியின் அக்கா ஜெகஜோதியின் கணவர். இவர் கஸ்தூரிபாய் தெருவில் மனைவியுடன் தனித்து குடியிருந்து வருகிறார். இவருக்கு சினிமா போஸ்டர்கள் ஒட்டும் வேலை. 15–3–1983 அன்று இவர் இரவு சுமார் 7 மணியளவில் தனது வேலையை முடித்துவிட்டு வீட்டிற்குத் திருப்பி வந்தார். அப்போது, காவலர்கள், மெய்யழகனும், ராமசாமியும், அவரைச் சந்தித்து தெய்வமணியின் தாயாரைக் காண்பிக்கும்படி கேட்டார்கள். அவர்களை அவர் ஆட்டோ ரிக்ஷாவில், தெய்வமணியின் தாயார் வேலை செய்யும் சன்னியாசிகுண்டில் கம்பளி நெய்யும் இடத்திற்கு அழைத்துச் சென்றார். அங்கு தெய்வமணியின் தாயார் இல்லாததால், மேற்சொன்ன காவலர்கள் பி. சார். 2-ஐ வெற்றுக்காகிதத்தில் கையெழுத்து போடும்படி கேட்டார்கள். அதற்கு பி. சார். 2 மறுத்து எதற்காக அப்படி கையெழுத்துப்போட வேண்டுமென்று கேட்டார். அதற்கு அவர்கள் விஷயத்தைச் சொன்னால் தங்களுடைய வேலை போய்விடும் என்று சொன்னார்கள். காவலர் மெய்யழகன் தன்னுடைய ஜேப்பிலிருந்து ஒரு ரூ.100 நோட்டை எடுத்து அதை வாங்கிக்கொண்டு பி.சார்.2-ஐ கையெழுத்துப்போடும்படி சொன்னார். அதை வாங்க பி.சார்.2 மறுத்துவிட்டார். அதனால் அவ்விரு காவலர்களும் அவரை அடித்தார்கள். பி. சார். 2 பயந்துக்கொண்டு சத்தம் போட்டார். சத்தத்தைக் கேட்டு ஜனங்கள் வந்தார்கள். அதனால் அவர்கள் உடனே பி.சார்.2-ஐ ஆட்டோவில் வைத்து ஏற்றி காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்றார்கள். அப்போது காவல் நிலையத்திற்கு அருகாமையில் கூட்டமாக இருந்தது. அங்கிருந்த தெய்வமணியின் சொந்தக்காரர்கள் தெய்வமணியை அடித்தும், கற்பழித்தும் கொலை செய்துவிட்டதாகக் கூறி கூச்சல் போட்டுக் கொண்டிருந்தார்கள். பி. சார். 2-ஐ அவ்விரு காவலர்களும் அங்கேயே, காவல் நிலையத்திற்கு அருகில் விட்டுவிட்டுப் போய்விட்டதால் பி. சார். 2 மற்றவர்களுடன் சேர்ந்துக் கொண்டு, காவல் நிலையத்திற்குள் சென்று பார்க்க முயற்சித்தபோது பெரிய அதிகாரிகள் வருவார்கள் என்று சொல்லி யாரையும் உள்ளே அனுமதிக்க வில்லை.

8. பி. சார். 3 கோட்டை மாரி இறந்துபோன தெய்வமணியின் சொந்த பெரியப்பா. 15–3–1983 அன்று இவர் இரவு 7 மணிக்கு தெய்வமணி இறந்துபோனதைப் பற்றிக் கேள்விப்பட்டு இச்சிப் பாளையம் காவல் நிலையத்திற்கு சென்றார். அவர் காவல் நிலையத்திலிருந்த காவலரிடம் தான் தெய்வமணியின் பெரியப்பா என்றும், இறந்துபோன தெய்வணியின் பிரேதத்தைப் பார்க்கவேண்டும் என்றும் சொன்னார். அதற்கு அதிகாரிகளெல்லாம் வந்து பார்த்த பிறகுதான் பார்க்கமுடியும் என்று சொல்லிவிட்டார்கள். காவல் நிலையத்திற்குள் சென்று என்ன நடந்தது என்று பார்க்க இவரை உள்ளே அனுமதிக்க வில்லை. பி. சார். 3-க்கு ஏதோ முடிமறைக்கிறார்கள் என்ற சந்தேகம் ஏற்பட்டது. காவல் நிலையத்தைச் சுற்றி அப்போது நிறைய 'ரிசர்வ்' காவலர்கள் இருந்தார்கள். ஆகையால் அன்று இரவு பி. சார். 3 தபால் நிலையத்திற்குச் சென்று முதலமைச்சருக்கும், இன்ஸ்பெக்டர் ஜனரல் ஆப் போலீசுக்கும், முன்னாள் முதலமைச்சர் திரு. கருணாநிதிக்கும் காவல் துறையினர் தெய்வமணியைக் கொலை செய்திருக்கிறார்கள் என்று தந்தி கொடுத்தார். தந்தி கொடுக்கும்போது அன்று இரவு சுமார் 12 மணி இருக்கும்.

9. பி. சா. 4 மொட்டையாண்டி கஸ்தூரிபாய் தெருவில் குடியிருக்கிறார். இறந்துபோன தெய்வமணி இவருடைய சொந்த மாமன் மகள். இவர் சம்பவ இரவு சுமார் 7-30 மணிக்கு காவல் நிலையம் சென்று தெய்வமணியைப் பார்க்க முயற்சித்தும் காவலர்கள் இவரை உள்ளே போக அனுமதிக்கவில்லை.

10. பி. சா. 14 திரு ஜீவரத்தினம் அவர்கள் சேலம் கோட்டாட்சித் தலைவர் ஆவார். 15–3–1983 அன்று இரவு 9 மணி அளவில், இவர் தன்னுடைய வீட்டிலிருந்தபோது, கிச்சிப்பாளையம் காவல் துறை ஆய்வாளர் திரு மலைய்ப்பன் காவல் நிலையத்தில் காவலிலிருந்த தெய்வமணி இறந்து விட்டதாகத் தெரியப்படுத்தினார். அன்று இரவு 9.45 மணிக்கு உதவி ஆய்வாளர் சந்திரன் (எ. சா. 6) சா. ஆ. பி. 15 முதலறிக்கையையும் எ. சா. 4 காவலரின் தனி அறிக்கை சா. ஆ. பி. 16- ஐயும், பி. சா. 14 இடம் விட்டில் நேரில் சமர்ப்பித்தார், அதன்பிறகு பி. சா. 14 தன்னுடைய அலுவலர்களுடன் இரவு சுமார் 10-30 மணிக்கு கிச்சிப் பாளையம் காவல் நிலையத்தை அடைந்தார். அப்போது அங்கு காவல் துறை துணை கண் காணிப்பாளரும் இருந்தார். காவல் நிலையத்தை அடைந்த பிறகு பி. சா. 14, பஞ்சாயத்தார்களாக பி. சா. 7 பாலாஜி, பி. சா. 8 ரவிகுமார், பி. சா. 9 தனபால், பி. சா. 10 சுப்ரமணியம், பி. சா. 16 ராஜசேகர் ஆகியோர்களை நியமித்து அவர்கள் முன்னிலையில் 'லாக்கப்' அறையைத் திறந்தார். அதன்பிறகு பி. சா. 7 பாலாஜி பி. சா. 14-ன் உத்தரவுப்படி 'லாக்கப்' அறையில் தொங்கிக்கொண்டிருந்த தெய்வமணியின் பிரேதத் தையும், கட்டியிருந்த புடவையின் பாகங்களையும் எவ்வாறு இருந்ததோ அவ்வாறே, பலகோணங் களில் புகைப்படங்கள் எடுத்தார். தொங்கிக் கொண்டிருந்த பிரேதத்தை அவிழ்த்து தரையில் போட்டு இருந்ததையும் புகைப்படம் எடுத்தார். மொத்தம் அவர் 9 புகைப்படங்கள் எடுத்தார். அவ்வாறு எடுத்த புகைப்படங்களின் 'நெகட்டிவ்' கள் சா. பொ. 1 வரிசைகள், புகைப்படங்கள் சா. பொ. 2 வரிசைகள். அதன்பிறகு பி. சா. 14ன் உத்திரவுக்கிணங்க பி. சா. 6 செல்லம்மாள், தெய்வமணியின் பிரேதத்தின் மீதிருந்த சா. பொ. 4 ரவிக்கையையும் சா. பொ. 5 பாவாடையையும் அகற்றி காயங்கள் ஏதாவது இருக்கிறதா என்று பரிசோதனை செய்து பார்த்தாள். அவ்வாறு பரிசோதனை செய்து பார்த்தபின் பி. சா. 14-ம் மேற்சொன்ன 5 பஞ்சாயத்தார்களும் பார்த்தார் கள். கழுத்தில் துணி இறுக்கிய கன்னிப்போன காயத்தைத் தவிர வேறு எவ்விதமான காயமும் இல்லை. அதன் பிறகு பி. சா. 14 பிரேத விசாரணை யின்போது உதவி ஆய்வாளர் எ. சா. 5 ரங்க சாமியையும், காவலர் எ. சா. 4 பெருமாளையும், உதவி ஆய்வாளர் எ. சா. 6 சந்திரனையும், பி. சா. 6 செல்லம்மாளையும், மற்றும், பி. சா. 7, பி. சா. 8, பி. சா. 9, பி. சா . 10 மற்றும் பி. சா. 16 ஆகியவர்களையும் விசாரித்து சா. ஆ. பி. 17 பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தார். பி. சா. 7 முதல் பி. சா. 10 மற்றும் பி. சா. 16 சாட்சிகளின் பிரேத விசாரணை அறிக்கையில் கையெழுத்துப் போட்டுள்ளார்கள். பிரேத விசாரணை அறிக்கையை எழுதி முடித்த பிறகு தெய்வமணியின் பிரேதத்தை காவலர் ராஜாராம் காவலர் எண் 2198, மற்றும் காவலர் 1705 ஆகியவர்கள் மூலம் பிரேத பரிசோதனைக்கு அரசு தலைமை மருத்துவ மனைக்கு சா. ஆ. பி. 13 கோரிக்கையுடனும், சா. ஆ. பி. 18 அறிக்கை யுடனும், பி. சா. 14 அனுப்பி வைத்தார். 'லாக்கப்' அறையில் கழுத்தைச் சுற்றித் தொங்குவதற்காக உபயோகப்படுத்தப்பட்ட புடவை சா. பொ. 3 ஆகும். அதை பி. சா. 14 சா. ஆ. பி. 19 மகசர் மூலம் கைப்பற்றியுள்ளார். அதில் பி. சா. 7, பி. சா. 9, மற்றும் பி. சா. 16 சாட்சிகள் கையெழுத்துப் போட்டுள்ளார்கள். தெய்வமணி யின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை இரவு 11 மணியிலிருந்து இரவு 1 மணி வரை தொடர்ந்து நடந்தது.

11. மேற்சொல்லியவாறு பிரேத விசாரணையை முடித்த பிறகு பி. சா. 14 காவல் நிலையத்தி லிருந்து தன் வீட்டிற்குப்போக எத்தனித்தார். அப்போது 3 நபர்கள் அவரைப் பார்க்கவேண்டு மென்று சொல்வதாகச் சொன்னார்கள். பி. சா. 14 அவர்களை அழைத்துவரும்படி சொன்னார். அழைத்து வந்த பிறகு அவர்களை அவர் விசாரித்தார். அவ்வாறு விசாரித்தவர்களில் பி. சா. 4 மொட்டையாண்டியும் ஒருவர். அவர்கள் கொடுத்த வாக்குமூலம் சா. ஆ. பி. 7 ஆகும். அதன் பின்னர் அம்மூவரும் பி. சா. 14-ஐ சுமார் 100 அடிக்கு அப்பாலிருந்த தெய்வமணியைச் சேர்ந்த சுமார் 100 நபர்களிடம் அழைத்துச் சென்றார்கள். அவர்கள் தெய்வமணி தூக்கு போட்டு இறந்திருக்கமாட்டார்கள் என்றும், தங்களுக்கு நியாயம் கிடைக்கவேண்டுமென்றும் சொன்னார்கள். அதற்கு பி. சா. 14 '' நீங்கள் தவலைப்படவேண்டாம், உறுதியாக நீதி கிடைக்கும் '' என்று கூறிவிட்டு வீட்டிற்கு திரும்பச் சென்றார்.

12. தந்தி கொடுத்த பிறகு பி. சா. 3 கோட்டைமாரி காவல் நிலையத்திற்கு அன்று இரவே திரும்பவும் சென்றார். அப்போது தெய்வமணியின் பிரேதத்தை அரசு மருத்துவ மனைக்கு அனுப்பியிருந்ததாகத் தெரிந்தது. உடனே அவர் அரசு மருத்துவ மனைக்குச் சென்றபோது பிரதான வாசலில் இருந்த காவலர் அவரை உள்ளே அனுப்ப மறுத்தார். அதனால் அவரும், மற்றவர்களும் அரசு மருத்துவ மனையில் வெளியிலேயே காத்திருந்து மறுநாள் காலை மருத்துவ மனைக்குள் சென்றார்கள்.

13. சேலம் அரசினர் தலைமை மருத்துவ மனையில் பெண் மருத்துவராகப் பணிபுரியும் பி.சா.12 டாக்டர் யாமளா இறந்துபோன தெய்வ

மணியின் பிரேதத்தின் மீது 16–3–1983ஆம் தேதி காலை 7-மணிக்கு பிரேத பரிசோதனை செய்துள்ளார். அவர் சமர்ப்பித்துள்ள பிரேத பரிசோதனைச் சான்றிதழ் சா. ஆ. பி. 14 அவருடைய சாட்சியத்திலிருந்து பிரேதத்தின் கண்கள் மூடியும், நாக்கு வாய்க்குள்ளாகவும், கைகள் நிறந்து காலியாக, இருந்தன என்று தெரிகிறது. பிரேதத்தின் கழுத்தின்முன்பகுதியில் ஒரு கூர்மைக்கோட்டில் தைரோய்டு கார்ட்டேஜ் பகுதியில் ஒரு வீக்கமும், அந்த வீக்கம் வலதுபுறத்தில் சாய்வாக நீண்டு நடுக் கோட்டின் வழியாக பின்கழுத்தின் தலைமுடிக்குக் கீழ்வரை காணப்பட்டதாகவும், அந்த வீக்கம் ½ செ. மீ. × 8 செ. மீ. என்ற அளவில் கழுத்தின் இடது புறத்திலிருந்து சாய்வாக நீண்டு பின் கழுத்துவரை சென்றதாகவும், சுவாசக் குழாய் கலங்கி காணப்பட்டதாகவும், ''ஹையோய்ட்'' எலும்பு சாதாரண நிலையில் இருந்ததாகவும், இருதயம், நுரையீரல்கள் ஆகியவை சிவந்து கலங்கிக் காணப்பட்டதாகவும், வயிறு காலியாகவும் கல்லீரல், மண்ணீரல் சிவந்து கலங்கியிருந்ததாகவும், சிறுநீர் பை காலியாக இருந்ததாகவும், கர்ப்பப்பை சாதாரண அளவில் இருந்ததாகவும், ''பெல்விஸில்'' காயம் எதுவும் காணப்பட வில்லையென்றும், பெண் உறுப்பில் புதிதாக காயம் காணப்படவில்லையென்றும், ''ஹைமன்' கிழிந்து காணப்பட்டதாகவும் பெண் உறுப்பில் இரண்டு விரல்கள் எளிதாகச் செல்லும்படியாக இருந்ததாகவும், தலையில் காயம் எதுவும் இல்லை யென்றும், முதுகுத்தண்டில் காயங்கள் எதுவும் இல்லையென்றும், பி.சா. 12 சாட்சியம் கூறி யுள்ளார். இவர் மேலும், பிரேத பரிசோதனை செய்வதற்கு முன் சுமார் 14 மணி முதல் 16 மணி நேரத்திற்குள்ளாக தெய்வமணி இறந்திருக் கலாம் என்றும், அவருடைய இறப்பிற்கு மூச்சுத் திணறல் காரணமாக இருக்கலாம் என்றும், தூக்குப்போட்டுத் தொங்கியதால் ஏற்பட்ட மூச்சுத் திணறலினால் தெய்வமணி இறந்திருக்க வேண்டு மென்றும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளார்.

14. பி. சா. 14 சேலம் கோட்டாட்சித் தலைவர் 16–3–1983ஆம் தேதி காலையில் எழுந்தவுடன் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் பி. சா. 17 திரு. வரதராஜுலு அவர்களுக்கு தான் இச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் பார்த்ததை பற்றியும், தன்னுடைய அபிப்பிராயத்தையும் தொலைபேசி மூலம் தெரியப்படுத்தினார். அதன் பின், காலை சுமார் 8 மணிக்கு பி. சா. 14 அரசு தலைமை மருத்துவ மனைக்கு சென்றார். அப்போது அங்கு ஜனங்கள் கூட்டமாக ஆர்பாட்டம் செய்து கொண்டிருந்தார்கள். அங்கு சேலம் மாவட்ட கண்காணிப்பாளர் இருந்தார். 'ரிக்குசென்' எழுதிக் கொடுத்து பிரேதத்தை எடுத்துச் செல்ல மறுப்பதாக பி.சா. 14 இடம் சொன்னார்கள். அதன் பிறகு பி.சா 14-ம் சேலம் மாவட்ட காவல் துறை கண்காணிப் பாளரும் அங்கிருந்தவர்களுக்கு சமாதானம் சொல்லி பிரேதத்தை உறவினர்களிடம் ஒப்படைத் தார்கள். அப்போது அங்கிருந்த தெய்வமணியின் உறவினர்களில் இறந்துபோன தெய்வமணியின் தாயாரும் இருந்தாள். பிரேதத்துடன் பி.சா. 3 மற்றவர்களும் ஊர்வலமாக சங்கீத் திரையரங் கிற்குப் பக்கத்திலுள்ள சுடுகாட்டுக்கு எடுத்துச் சென்றார்கள். பிணத்தை குழியில் வைப்பதற்கு முன்பு பிணத்தை மேலே வைத்து பி. சா. 4 மொட்டையாண்டி பிணத்தின் மீதிருந்த 'கோடி' துணியை நீக்கிப் பார்த்தார். அவ்வாறு அவர் பார்த்தபோது பிரேதத்தின் இடது கன்னத்தில் பல்லால் கடித்த காயமும், இடது பக்க மார்பில் நகக்காயமும், வலது பக்க மார்பில் ரேலும் இருந்தன. பெண் மர்மஸ் தானத்தில் பஞ்சுவைத்து அடைத்து ரத்தக் கசிவு ஏற்பட்டிருந்தது. அவ்வாறு ஏற்பட்டுள்ள காயங்களை பி. சா. 2, பி. சா. 3 சாட்சிகளும் பார்த்தார்கள். அதன்பிறகு அன்று பகல் சுமார் 11 மணியளவில் மேல்சொன்ன மயானத்தில் தெய்வமணியின் பிரேதம் புதைத்து அடக்கம் செய்யப்பட்டது.

15. 16–3–1983 அன்று காலை 8-30 மணிக்கு பி.சா. 14, சா. ஆ. பி. 14 பிரேத பரிசோதனை அறிக்கை கிடைக்கப்பெற்றார். அதன்பிறகு அவர் தன் அலுவலகத்திற்குச் சென்று தன்னுடைய முதல்கட்ட அறிக்கையை (Preliminary Report) பி. சா. 17-க்கு அனுப்பி வைத்தார். அவ்வாறு அந்த முதல்கட்ட அறிக்கையை அனுப்பும்போது பகல் சுமார் 12 மணி இருக்கும். அன்று பகல் சுமார் 1 மணிக்கு 'ஹிக்கதிர்' நாளேட்டின் நிருபர் வெங்கிட்டபதியும், மற்றும் நான்கைந்து நிருபர் களும் பி. சா. 14-ஐ பேட்டி கண்டார்கள்.

16. 16–3–1983 அன்று மாலை சுமார் 5-30 மணிக்கு பி. சா. 17 சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் சா. ஆ. பி. 20 உத்திரவின்படி பி. சா. 14-ஐ பி. எஸ். ஒ. 145-வது பிரிவின்கீழ் விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்கும்படி உத்திரவு அனுப்பினார். அதன்பிறகு பி.சா. 14 விசாரணையைத் தொடங்கி பி. சா. 1 முதல் பி. சா. 4, பி.சா. 6 முதல் பி. சா. 8, பி.சா 10 மற்றும் பி.சா. 12 ஆகிய சாட்சிகளையும், எ.சா. 3 முதல் எ. சா. 6 ஆகிய சாட்சிகளையும், மற்றவர் களையும் விசாரித்து 13–4–1983 அன்று தன்னுடைய முழு அறிக்கையை பி. சா. 17-க்கு அனுப்பிவைத்தார். அதன்பேரில், பி. சா. 17 தன்னுடைய அறிக்கையை அரசாங்கத்திற்கு 2–5–1983 அன்று அனுப்பிவைத்தார்.

17. பி.சா. 13 அர்த்தனாரி சூரமங்கலத்தில் குடியிருக்கிறார். இவர் இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்கிஸ்ட்)-யின் சேலம் மாவட்ட குழுவின் செயலாளர் ஆவார். 16–3–1983 அன்று இரவு சுமார் 8-மணிக்கு பி.சா. 13 அர்த்தனாரியும், மற்ற கட்சியைச் சேர்ந்தவர்களும் தமிழ்நாடு முதலமைச்சருக்கும், திரு என். சங்கரய்யா, திரு நெடுமாறன், திரு மாணிக்கம் ஆகிய வர்களுக்கும் தந்தி அனுப்பியுள்ளார்கள். பி.சா.13 தன்னுடைய

கட்சியைச் சேர்ந்த திரு. சங்கரய்யாவிடம் சொல்லி தமிழ்நாடு சட்டப்பேரவையில் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவந்தார். 19–3–1983 அன்று பி. சா. 13, பி. சா. 17-ஐ அவருடைய வீட்டில் சந்தித்து தனக்கு தெய்வமணியின் சாவு குறித்து நியாயம் கிடைக்கவேண்டும் என்று கேட்டுள்ளார். பி.சா. 13-ம் மற்றவர்களும் சர்வ கட்சிக்கூட்டத்தைக் கூட்டி சா. ஆ. பி. 6 விண்ணப்பத்தை பி. சா. 17 இடம் சமர்ப்பித்துள்ளனர். 20–3–1983 அன்று சேலம் டவுனில் தெய்வ மணியின் சாவைப் பற்றி ஒரு சர்வகட்சிக் கூட்டம் நடந்தது. 19–3–1983 அன்று பி.சா. 13-ம் மற்ற கட்சித் தலைவர்களும் பி.சா. 17-ன் இல்லத் திற்குச் சென்று சா.ஆ.பி. 22 கடிதத்தையும் அத்துடன் இணைக்கப்பட்டுள்ள சா. ஆ.பி. 23 அறிக்கையையும் கொடுத்துள்ளனர். சா.ஆ.சி. 1 மனுவை பி.சா. 3-ம் மற்றவர்களும் பி.சா. 14-க்கு அனுப்பியுள்ளனர்.

18. பி.சா. 4 மோட்டையாண்டியும், தெய்வ மணியின் சாவைக் குறித்து சா. ஆ.பி. 4, பி.5, பி. 6, பி. 8 அறிக்கைகளை மாவட்ட ஆட்சித் தலைவருக்கும் மற்றவர்களுக்கும் அனுப்பி யுள்ளார். பி.சா. 4-ம், பி.சா. 3-ம் மற்றொரு வருடன் சேர்ந்து பி.சா. 14க்கு கொடுத்த விண்ணப்பம் சா.ஆ.பி. 7 ஆகும். பி.சா. 5 மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பியுள்ள விண்ணப்பம் சா. ஆ. பி. 9 முதல் சா. ஆ. பி. 11 ஆகும். தெய்வமணியின் சாவு சந்தேகப்படும் நிலையில் ஏற்பட்டிருக்கிறது என்று தெரியப் படுத்தும் வகையில் 'மாலை முரசு' பத்திரிகை யிலும் மற்ற பத்திரிகைகளிலும் செய்திகள் வந்துள்ளன, மாலை முரசு 20–3–1983 ஆம் தேதிய இதழ் சா.ஆ.பி. 12 ஆகும். மற்ற பத்திரிக்கைச் செய்திகளும் கமிஷன் முன்பு தாக்கல் செய்ய ப்பட்டுள்ளன.

19. 16–3–1983 அன்று ஒரு வீரன் என்பவர் பி.சா. 17-க்கு சா.ஆ.பி. 24 தந்தியைக் கொடுத்தார். அதில் கீழ்க்கண்டவாறு கூறப் பட்டுள்ளது :

"Harijan girl harassed at Police Station, Kitchi-palayam, Salem town and beaten to death by the Sub-Inspector of Police, Chandran and Crime Police. 15th instant. Pray urg nt action."

இந்த தந்தியில் வீரன் தான் கதவு எண் 37 ஆதித் திராவிடர் தெரு, கிச்சிப்பாளையத்தில் குடி யிருப்பதாக குறிப்பிட்டுள்ளார். மேற்சொன்ன அவருடைய விளாசத்திற்கு அவரை விசாரிப்பதற் காக சம்மன் அனுப்பப்பட்டது. அவ்வாறு அனுப்பிய சம்மனில் அத்தகைய பெருமை நபர் அந்த வீதியில் இல்லையென்றும், தந்தியில் குறிக்கப் பட்டுள்ள கதவு எண் பாழடைந்த காலி இடமாக இருக்கிறது என்றும் தெரியவருகிறது. பி.சா. 3 கோட்டை மாரியும் அத்தகைய பெயர் உள்ள நபர் கிச்சிப்பாளையத்தில் இல்லையென்றும், வீரன் என்பவரைத் தெரியாது என்றும் ஒப்புக் கொள்கிறார். மற்றும் காவலர்களுக்கு எதிராக பிரமாணப்பத்திரிக்கைகள் தாக்கல் செய்துள்ளவர் களும் அவர்களுடைய வழக்கறிஞர்களும் அத்தகைய நபர் கிச்சிப்பாளையத்தில் இல்லையென்றும், சா. ஆ.பி. 24 தந்தியில் கண்டுள்ள நபரை விசாரிக்க முடியாது என்றும் ஒப்புக்கொள்கின்றார்கள். ஆகவே, சா.ஆ.பி. 24 தந்தி இவ்வழக்கிற்கு எவ்வித பயனும் அளிக்க இயலாத நிலையிலேயே இருக்கிறது.

20. பி.சா. 5 திருமதி வசந்தா ரத்தினவேலு இந்திய தேசியமாதர் சங்க சம்மேளன சங்கத்தின் சேலம் மாவட்ட செயலாளர். 16–3–1983 அன்று இவர் இச்சம்பவத்தைப் பற்றி தெய்வமணியின் வீட்டிற்குச் சென்று தெய்வமணியின் தாயாரையும் மற்றவர்களையும் விசாரித்தார். இவருடைய சாட்சியத்திலிருந்து இந்த மாதிரி திங்கு இவி ஒரு பெண்ணுக்கு ஏற்படக்கூடாது என்பதற்காகத் தான் இவர் சாட்சியமளித்துள்ளார் என்று தெரிகிறது. சா. ஆ. பி. 19, பி. சா. 17-க்கு இவர் அனுப்பிய மனு சா.ஆ.பி. 10 இவர் மக்களுக்கு கொடுத்த அச்சடித்த நோட்டீசுகளின் ஒரு பிரதி யாகும். சா.ஆ.பி. 11 மனுவை இவர் 16–4–1983 -ந்தேதி அன்று பி.சா. 17-க்கு அனுப்பினார். 20–3–1983 ஆம் தேதி கிச்சிப்பாளையத்தில் நடந்த சர்வ கட்சிக்கூட்டத்தில் இவர் கலந்துகொண்ட செய்திவந்த செய்தித்தாள் சா.ஆ.பி. 12 ஆகும்.

21. பி.சா. 11 எல்லம்மாள் சேலம் நகர தி.மு.க பெண்கள் பிரிவு பிரதிநிதி. இவர் தெய்வமணி இறந்தது பற்றி தன்னுடைய அபிப்பிராயத்தை மட்டும் இந்த கமிஷன் முன்பு தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறாள்.

22. பி.சா. 1 முதல் பி. சா. 17 சாட்சிகளை விசாரித்த பிறகு காவலர்களுக்கு எதிராக வேறு ஏதாவது சாட்சியம் இருக்கிறதா என்று பகிரங்க மாகக் கேட்கப்பட்டபோது விசாரணைக்காகக் கூடியிருந்தவர்கள் வேறு சாட்சிகள் ஏதும் இல்லை யென்று சொன்னார்கள். அதன் பேரில் பி.சா. 1 முதல் பிசா. 17 சாட்சிகளின் சாட்சியத்தை அத்துடன் முடித்துக்கொண்டு காவலர்கள் தரப்பில் சாட்சிகளை விசாரிப்பதற்காகவி சாரணை ஒத்திப்போடப்பட்டது. அதன் பின்னர் காவலர்கள் தரப்பில் எ.சா. 1 முதல் எ. சா. 6 சாட்சிகளை விசாரித்துக் கொண்டு தங்களுடைய சாட்சியத்தை காவலர்கள் முடித்துக் கொண்டார்கள்.

23. எ சா. 1 மீனாட்சி சுந்தரம் சம்பவம் சமயம் நீதித்துறை முதல் வகுப்பு முதலாவது எண் நடுவர் மன்றத்தில் இளநிலை உதவியாளராக இருந்தார். 15–3–1983 அன்று கிச்சிப்பாளையம் காவல் நிலைய குற்ற எண்கள் 7, 27, மற்றும் 189/83 ஆகிய வழக்குகள் சம்பந்தப்பட்ட சேகர் என்கிற சந்திரசேகர் என்ற கைதியையும், அதே காவல் நிலைய குற்ற எண். 189/83 என்ற வழக்கு சம்பந்தப்பட்ட ரஃபீக் பாஷா என்ற கைதியையும் மேற்சொன்ன நீதிமன்றத்தில் ரிமாண்டுக்காக கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தைச்சார்ந்த காவலர்கள் கொண்டுவந்தார்கள். மேற்சொன்ன

நீதிமன்றத்தில் அவ்விரு கைதிகளும் நிறுத்தப்பட்டு, அன்று பிற்பகல் சேலம் (ஆண்கள்) தனி கிளைச் சிறைச்சாலைக்கு அதே காவலர்கள் மூலம் அனுப்பப்பட்டார்கள். அதற்காக ஏற்பாடுள்ள 'நிறுத்தி' ரிப்போர்ட்டுகள்' எ. சா. ஆ. 1, மற்றும் எ.சா.ஆ. 7 ஆகும். அவைகளில் நீதித்துறை முதல் வகுப்பு நடுவர் திரு சீதாராமன் கையெழுத்துப் போட்டுள்ளார்.

24. எ.சா. 2 சண்முக சுந்தரம் சம்பவ சமயம் சேலம் (ஆண்கள்) தனி கிளைச் சிறைச்சாலையில் முதல் தலைமை காவலராக பணியாற்றி வந்தார். 15–3–1983 அன்று பிற்பகல் 2–25 மணிக்கு கிச்சிப் பாளையம் காவல் நிலையத்தைச் சார்ந்த எ.சா. 3 மோகன் ராமும், மற்றொரு காவலர் பி.சி. 1270-ம் மேற்சொன்ன இரு கைதிகளையும் நிறுத்தி செய்வதற்காக மேற்சொன்ன கிளைச் சிறைச்சாலைக்கு அழைத்து வந்தார்கள். அது பற்றி சிறைச்சாலை பதிவேட்டில் எ. சா. ஆ. 2-ல் எழுதப்பட்டுள்ளது. இதை எ.சா. 2 தன் கைப்பட எழுதி கையெழுத்தும் போட்டுள்ளார். அன்று பிற்பகல் 2-25 மணிக்கு அவ்விரு கைதிகளையும் சிறைச் சாலையில் ஒப்படைத்து விட்டதாக பிறகு, எ.சா. 3-ம் மற்றும் அவருடன் வந்த காவலரும், திரும்பிப் போய் விட்டார்கள். அதன் பிறகு, எ. சா. 3 கிச்சிப் பாளையம் காவல் நிலையத்திற்கு இரவு சுமார் 7 மணிக்குத்தான் மறுபடியும் சென்றார்.

25. எ. சா. 4 பெருமாள் கிச்சிப்பாளையம் காவல் நிலையக் காவலர். 15–3–1983 அன்று அவர் கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் 'சென்ரி' பொறுப்பில் இருந்தார். எ.சா. 5 ரங்காசாமியும், எ. சா. 6 சந்திரனும் கிச்சிப் பாளையம் காவல் நிலையத்தில் சம்பவ சமயம் குற்றப்பிரிவு துணை ஆய்வாளராகவும், சட்டம் -ஒழுங்கு பிரிவு துணை ஆய்வாளராகவும் முறையே பணி ஆற்றினார்கள். "இவர்கள் சாட்சியம் மேற்கண்டவாறு சுருக்கமாக அமைந்துள்ளது :—

15–3–1983 அன்று கிச்சிப்பாளையம் காவல் நிலையத்திற்கு பிற்பகல் 1–30 மணியளவில் பி. சா. 1 பேச்சியம்மாள் தெய்வமணியை அழைத்து வந்தாள். அப்போது அவளுடன் இரண்டு பெண்களும் ஒரு ஆணும் இருந்தார்கள். பி. சா. 1 ஏற்கனவே எழுதியிருந்த சா. ஆ. பி. 1 பிராதையும் திருட்டுப்போன எவர்சில்வர் தட்டும் கொண்டுவந்து உதவி ஆய்வாளர் எ. சா. 5 ரங்காசாமியிடம் ஒப்படைத்தாள். அது பற்றி பொது நாட்குறிப்பில் குறிக்கப்பட்டிருக்கிறது. ஏற்கனவே சொல்லியபடி தெய்வமணியை "லாக்கப்" அறையில் வைத்துப் பூட்டிய பிறகு உதவி ஆய்வாளர் எ. சா. 5 ரங்காசாமியும் அவருடன் இருந்த கணேசனும், சின்னசாமியும் தெய்வமணி பேரில் பதிவு செய்துள்ள மேற் சொன்ன வழக்கில் சாட்சிகளை விசாரிப் பதற்காக கஸ்தூரிபாய் தெருவுக்குப் போய் விட்டார்கள். சிறிது நேரத்தில் பி. சா. 6 செல்லம்மாளும் தன்னுடைய வீட்டிற்குச் சாப்பிடப் போய்விட்டாள். அதன் பிறகு எ. சா. 4 பெருமாள் மட்டும் தனித்து காவல் நிலையத்தில் இருந்தார். காவல் நிலையத்தில் "ஹாலில்" இருந்த வி. எச். எப். தொலை பேசியை பராமரிக்க வேறு யாரும் இல்லை. அதை எ. சா. 4 தான் கவனிக்க வேண்டியிருந்தது. அதனால், உதவி ஆய்வாளரும் மற்றவர்களும் புலன் விசாரணைக்காக வெளியில் சென்ற பிறகு, எ.சா. 4 வி.எச்.எப் பக்கத்தில் சென்று உட்கார்ந்திருந்துக் கொண்டிருந்தார். பிற்பகல் 3 மணிக்கு அவர் காவல் நிலையத்தில் வெளி வராந்தாவில் உள்ள ஜன்னல் வழியாக "லாக்கப்" அறையைப் பார்த்தார். அப்போது தெய்வ மணி "லாக்கப்" அறையில் கதவு பக்கத்தில் உட்கார்ந்து கொண்டிருந்தாள். அவ்வாறு பார்த்துவிட்டு திரும்பவும் வி.எச்.எப். பக்கத் லேயே சென்று எ.சா. 4 உட்கார்ந்து கொண்டிருந்தார். அதன் பிறகு அவர் மறுபடியும் மாலை 4–30 மணி அளவில் "லாக்கப்" அறையை ஜன்னல் வழியாக உள்ளே தெய்வமணி என்ன செய்துகொண்டிருக்கிறாள் என்று பார்த்தார். அப்போது ஜன்னலில் புடவை கட்டியிருப்பது தெரிந்தது. என்ன நடந்திருக்கிறது என்று அவர் உள்ளே பார்த்தபோது ஜன்னல் கம்பியிலும் கதவு தாழ்ப்பாளிலும் சேலையைக் கட்டி தெய்வமணி சேலையைக் கழுத்தில் சுற்றித் தொங்கிக் கொண்டிருந்தாள். கூப்பிட்ட தற்கு தெய்வமணியிடமிருந்து எந்த பேச்சும், உடலில் எந்த அசைவும் இல்லை. அதனால் தெய்வமணி தூக்குப் போட்டுவிட்டாள் என்று உடனே சட்டம் மற்றும் ஒழுங்கு உதவி ஆய்வாளர் எ. சா. 6 சந்திரனுக்கு காவல் நிலையத்திலிருந்து தொலைபேசி மூலம் தான் பார்த்ததைச் சொன்னார். அதன் பிறகு எ.சா. 6 சந்திரன் கிச்சிப்பாளையம் காவல் நிலையத்திற்கு மாலை 5 மணிக்கு வந்தார். அவர் வந்தது ம் எ. சா. 4 பெருமாள் சா. ஆ.பி. 16 தனி அறிக்கை (Sp cial report) யை அவரிடம் கொடுத்தார். அந்த அறிக்கையை சா. ஆ. 6, கிச்சிப்பாளையம் காவல் நிலைய குற்ற எண் 210/83-ன் மீழ் கு.வி.மு.ச. 174-வது பிரிவின் கீழ் வழக்குப் பதிவு செய்தார். சா.ஆ. பி. 15 அந்த வழக்கின் துரித முதல் அறிக்கை (F.I.R.) ஆகும். அதற்கு பிறகு எ.சா. 6 துரித அறிக்கையின் நகல்கள் தயார் செய்து உயர் அதிகாரிகளுக்கும் பி.சா. 14 கோட்டாட்சித் தலைவருக்கும் அனுப்பி வைத்தார். பி. சா. 14 விடம் துரித அறிக்கையை எடுத்துச் சென்ற காவலர் எண் 1977 சுந்தரம் அன்று இரவு 9–15 மணி அளவில், அஸ்தம்பட்டி காவல் நிலையத்திலிருந்து தொலை பேசிமூலம் பி. சா. 14-ன் வீட்டைக் கண்டு பிடிக்க முடிய வில்லையென்று எ. சா. 6-க்கு தெரிவித்தார். அதன் பின்னர். எ. சா. 6 தானே நேரில் மோட்டார் சைக்கிளில் புறப்பட்டுச் சென்று, ஏற்கனவே சொல்லி உள்ளபடி, இரவு 9-45 மணி அளவில் சா.ஆ. பி. 15-ஐயும், சா.ஆ.பி. 16ஐயும் பி. சா. 14 இடம் சமர்ப்பித்தார்.

26. 21–7–1983 அன்று காலை 10–45மணிக்கு கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தை நேரில் சென்று பார்வையிட்டேன். அப்போது என்னுடன் வழக்கறிஞர்கள் திருவாளர்கள் பி. வி. கோவிந்த ராஜ், பி.வி. சினிவாசன், எஸ் பார்த்தசாரதி, ஆர். சினிவாசன், மற்றும் எஸ். ராமநாராயணன், சேலம் காவல்துறை கண்காணிப்பாளர் திரு. கே. விஜயகுமாரும் பி. சார. 14 திரு. ஏ. எஸ். ஜீவரத்தினம் ஆகியோர்களும் இருந்தார்கள். காவல் நிலையத்தில் காவல் நிலையத்தைச் சேர்ந்த காவலர்களும் உதவி ஆய்வாளரும் இருந்தார்கள். பார்வையிட்டபோது காவல் நிலையத்தில் கண்ட விவரங்களை என்னுடைய 'நோட்ஸ் ஆப் இன்ஸ்பெக்ஷனில்' விவரமாக குறித்துள்ளேன். அது இந்த அறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது. அந்த 'நோட்ஸ் ஆப் இன்ஸ்பெக்ஷனுடன்' இரு வரை படங்களும் வரைந்துள்ளேன். அந்த 'நோட்ஸ் ஆப் இன்ஸ்பெக்ஷனின்' நகல்களும் வரைபடங் களின் நகல்களும் எல்லா வழக்கறிஞர்களுக்கும் மற்றும் வழக்கறிஞர்கள் இல்லாமல் நேரில் ஆஜரான சாட்சிகளுக்கும் கொடுக்கப்பட்டன.

27. மேலேச் சொல்லியபடி பி. சார. 1 முதல் பி. சார. 17 சாட்சிகளையும் எ. சார. 1 முதல் எ.சார. 6 சாட்சிகளையும் விசாரித்த பிறகு விசாரணை 7–9–1983 அன்று பிற்பகல் 1–45 மணியளவில் முடிவு அடைந்தது. அதன் பிறகு 19–9–1983 அன்று சாட்சிகள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள், காவலர்கள் தரப்பில் ஆஜரான வழக்கறிஞர்கள் ஆகியோர்களின் வாதத்தையும் நேரில் ஆஜரான சாட்சிகளின் தனிப்பட்ட வாதமும் கேட்கப்பட்டன.

28. இவ்விசாரணையில் பிரச்சினைக்கு எழும் முக்கிய கேள்விகள்:—

(1) தெய்வமணி எந்தச் சூழ்நிலையில் எவ்வாறு இறந்தாள்?

(2) தெய்வமணி இறப்பதற்கு முன்பு கற்பழிக்கப்பட்டாளா? அவ்வாறு கற்பழிக்கப் பட்டிருந்தால் அதற்கு யார் பொறுப்பாளி களாக இருந்தார்கள்?

(3) இத்தகைய சம்பவம் காவல் நிலையத் தில் நடக்காமல் இருக்க என்னென்ன நடவடிக் கைகள் எடுத்துக்கொள்வது உசிதம் என்று கருதலாம்?

29. கேள்வி எண். 1.—பி. சார. 12 டாக்டர் தியாமளாவின் சாட்சியத்திலிருந்து தெய்வமணி 15–3–1983 அன்று மாலை சுமார் 3 மணிக்குப் பிறகு இறந்திருக்கலாம் என்று தெரிகிறது. எ.சார. 4 பெருமாளின் சாட்சியத்திலிருந்து 15–3–1983 அன்று மாலை 4–30 மணி அளவில் தெய்வமணி இறந்து தொங்கிக் கொண்டிருந்த தாகத் தெரிகிறது. ஆகவே 15–3–1983 அன்று மாலை சுமார் 3 மணிக்கு மேல் மாலை சுமார் 4–30 மணிக்குள் தெய்வமணி இறந்திருக்கலாம் என்று ஊகிக்க முடிகிறது. இதை ஆட்சேபித்து என் முன் வாதத்தின் போது எந்தவிதமான ஆட்சே பனையும் யாரும் எழுப்பக் கிடையாது. மேலே கூறப்பட்ட கால அளவில் தெய்வமணி கிச்சிப் பாளையம் காவல் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்தாள் என்பதும், அவ்வாறு காவலில் இருக்கும்போது அவள் இறந்து விட்டாள் என்பதும், ஒத்துக்கொள்ளப்படுகிறது. அதுமட்டுமின்றி. காவல் நிலையத்திற்கு வருவதற்கு முன்பும், காவல் நிலையத்திற்கு வந்த பிறகு சாகும் வரையிலும், தெய்வமணி நல்ல உடலாரோக்கியத்துடன் இருந்தாள் என்பதும் ஒத்துக்கொள்ளப்படுகிறது.

30. இனி, தெய்வமணி மேற்சொல்லிய கால அளவில் இறந்து போனதற்குக் காரணம் என்ன என்பதை முதற்கண் எடுத்துக் கொண்டு ஆராய்ந்து பார்ப்போம். எவர்சில்வர் தட்டை யும் மற்ற சாமான்களையும் பி.சார. 1-ன் வீட்டி லிருந்து திருடியதை தெய்வமணி அன்றே விசாரணையின்போது உதவி ஆய்வாளரிடம் ஒத்துக்கொண்டுள்ளாள். இதற்கு முன்பு அவள் இதே காவல் நிலைய திருட்டு வழக்கில் தண்டனை அடைந்திருக்கிறாள். 15–3–1983 அன்று நடந்த விசாரணையின்போதோ அல்லது அன்று காவல் நிலையத்தில் இருக்கும்போதோ தெய்வ மணி, தான் செய்த திருட்டுக் குற்றத்திற்கு எவ்வகையிலேனும் வருந்தி மனம் சோர்ந் திருந்தாள் என்று காட்டவோ, அல்லது வாழ்க்கையில் மனக்கசப்பு ஏற்பட்டு வாழ்க்கையை வெறுக்கும் வகையில் எவ்வகையிலேனும் நடந்துக் கொண்டாள் என்று காட்டவோ. சாட்சியம் எதுவும் அளிக்கப்படவில்லை. எனவே தெய்வ மணி திருட்டுக் குற்றத்தை ஒத்துக்கொண்டுள்ளாள் என்றாலும், ஏற்கனவே திருட்டுக் குற்றத்திற்கு தண்டனை அடைந்திருக்கிறாள் என்றாலும், மனச் சோர்வு அல்லது வாழ்க்கையில் வெறுப்பு அடைந்து தன்னைத்தானே மாய்த்துக்கொள்ளும் மன நிலையில் மேற்கூறிய கால அளவின்போது இருந்தாள் என்று சொல்ல முடியாது. தெய்வ மணி கல்யாணம் ஆகாத நல்ல ஆரோக்கிய முள்ள இளம் பெண். தாயாருடன் குடி யிருந்தாள். தன்னிச்சையாக வாழ்ந்துக் கொண் டிருந்தவள். இத்தகைய சூழ்நிலையில் இளம் பெண்ணாகிய இவள் திருட்டுக் குற்றம் சாட்டப்பட்ட காரணத்தால் வாழ்க்கையில் வெறுப்பு அடைந்து தன்னைத்தானே மாய்த்துக் கொள்ள எத்தனித்து, அதில் வெற்றியும் கண்டாள் என்று சொல்வது ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை என்று சொன்னால் அது மிகையாகாது.

31. மேற்சொன்னவாறு தெய்வமணி தன்னைத் தானே மாய்த்துக் கொள்ளும் சூழ்நிலையில் காவல் நிலையத்தில் இருந்தது எவ்வகை யிலேனும் ஏற்றுக் கொள்ளும் வகையில் இல்லை யென்று எடுத்துக் கொண்டாலும், 'திடீர்' என்று

அத்தகைய ஒரு மனநிலை உருவாகி தன்னைத் தானே மாய்த்துக்கொள்ள எத்தனித்தும், வெற்றியும் கண்டிருக்கலாம். அல்லது வேறு எவ்வகையிலேனும், யாராவது தாக்கி உயிர் போன பிறகு, இறந்துபோன தெய்வமணியை சா. பொ. 2 வரிசைப் புகைப்படங்களில் கண்டுள்ளபடி புடவையைக் கழுத்தில் சுற்றி தூக்கில் தொங்கவைத்து, உயிர்போக வைத்ததை மறைக்க அவ்வாறு ஏற்பாடு செய்தும இருக்கலாம், இவ்விரு சூழ்நிலைகளில் எது உண்மை என்பதை இனிக் கவனிப்போம்.

32. இவ்வழக்கிலுள்ள மருத்துவ சாட்சியம், தெய்வமணி தானாகவே சா.பொ. 2 வரிசை புகைப்படங்களில் கண்டுள்ளபடி புடவையைக் கழுத்தில் சுற்றித் தொங்கி மூச்சடைப்பின் காரணமாக இறந்திருப்பாள் என்ற முடிவிற்கு தீர்மானமாக வரமுடியாத நிலையில் இருக்கிறது. In the medical Jurisprudence (IV Edition 1981) by Dr. R. M. Jhala and V. B. Raju, it has been stated at page 238 as follows :—

" The first and most important thing in a *post-mortem* of hanging is to establish that the person was hanged when he was alive. To decide this, it is necessary to cut the skin across the ligature mark. If the person was alive when hanged, the ligature mark would show evidence of *ante mortem* injury. These include contusion of tissue, petechial haemorrhage and extravasation of blood. Sometimes assistance of magnifying lense has to be taken for noting these points."

இவ்வழக்கில் காணப்பட்ட 'லகேச்சர்' அடையாளத்தை மருத்துவர் மேற்சொல்லியபடி நிறந்து அறுத்துப்பார்த்தார் என்பதைக் காட்ட மருத்துவர் அளித்துள்ள சா.ஆ.பி. 14 பிரேத பரிசோதனைச் சான்றிதழில் எதுவும் சொல்லப் படவில்லை. இச்சான்றிதழில் அவ்வாறு அறுத்து ஆராய்ந்து பார்த்ததைப் பற்றி எதுவும் குறிப்பிடாததால், வாய்மொழியாக இப்போது தன்னுடைய சாட்சியத்தில் மருத்துவர் அத்தகைய ஆராய்ச்சி செய்ததாகச் சொல்லுவதை நாம் ஏற்றுக் கொள்ள முடியாது. மருத்துவர் அவருடைய குறுக்கு விசாரணையில் கீழ்க்கண்ட வாறு ஒத்துக்கொள்கிறார் :—

" Pressure on the sides of the neck will bring asphyxia. In M.O. 2 series, I find pressure on the sides of the neck. The knot found in M.O. 2 series are just below the chin. There is space between the knot and the throat in M.O. 2 series. In M.O. 2 series the knot tightened (mistake for 'does not tighten') the front portion of the neck I still think that the pressure on the sides of the neck will produce asphyxia."

மேற்சொல்லியவாறு கழுத்தின் இருபக்கமும் அழுத்தம் ஏற்பட்ட காரணத்தால் மூச்சுத் திணறல் ஏற்பட்டு மரணம் விளைந்திருந்தால் மூளையில் கலக்கம் (Cong stion) ஏற்பட்டிருக்கவேண்டும். ஆனால் மருத்துவர் சா.ஆ.பி. 14 பிரேத பரிசோதனைச் சான்றிதழில் இது பற்றி எதுவும் குறிப்பிடவில்லை. சாதாரண மாக கழுத்தின் இரு பக்கமும் ஏற்பட்ட அழுத்தத் தின் காரணமாக ரத்த ஓட்டம் நின்று மரணம் ஏற்பட்டிருக்குமேயானால் மூளை அதிகமாகவும், பெருவாரியாகவும் கலக்கம் (Cong stion) ஏற்பட்ட நிலையில் இருந்திருக்கவேண்டும்.

In Lyon's Medical Jurisprudence for India—IX Edition by T. F. OWENS, L.R.C.P. & S. at page 299, it has been stated as follows :—

" *Brain.*—Even in asphyxia deaths the brain may appear more or less normal ; on the other hand, the meninges and the brain may be intensely congested. In the first case the stoppage of the circulation has been complete ; in the second the venous circulation only has been stopped."

சா. பொ. 2 வரிசை புகைப்படங்களிலிருந்து கழுத்தின் மத்திய பாகத்துக்கும் முடிச்சுக்கும் இடையில் கைவிரல் நுனி நுழையக்கூடிய அளவிற்கு இடைவெளியிருக்கிறது என்று தெரிகிறது. மேலும் தொங்கிக்கொண்டிருக்கும் போது இரு முழங்கால்களும் தரையில் படும் அளவுக்கு உயரம் குறைவாகவே இருந்திருக்கிறது. ஆகவே மரணம், கழுத்தின் இரு பக்கத்திலும் ஏற்பட்ட அழுத்தத்தின் காரணமாக விளைந்திருக் மேயானால், மூளையில் வெகுவாக ஏற்பட்டு இருக்கவேண்டிய கலக்கத்தைப் பற்றி எவ்வகை யிலேனும் பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிக்கப்படாததால், மரணம் மூச்சு அடைப்பால் ஏற்பட்டிருக்கும் என்று நாம் தீர்மானமாக முடிவு செய்யமுடியாது.

33. மேலும், மருத்துவர் முகத்தில் ஏற்பட்டுள்ள மாறுபாடுகளை அவருடைய பிரேத பரிசோதனை அறிக்கையில் குறிக்கவில்லை. கண்ணைத் திறந்துப் பார்த்து கண்ணில் '' Suffusc '' இருந்ததா என்பதைப் பற்றியும் அவர் குறிக்கவில்லை. ஆகவே மருத்துவர் சாட்சியத்திலிருந்து தெய்வமணியின் இறப்பு மூச்சு அடைப்பின் காரணமாக ஏற்பட்டது என்று தீர்மானமாகச் சொல்ல முடியாது. இதுவன்றி பி.சா. 14 குறுக்கு விசாரணையில் பிரேதத்தில் வலது தாடையில் (பிரேதம் தரையில் வைக்கப் பட்டபோது எடுத்துள்ள சா.பொ. 2 வரிசை புகைப் படத்தில் கண்டுள்ளபடி) ''லகேச்சர்'' அடையாளம் இருந்தது என்று ஒப்புக்கொள் கிறார். இத்தகைய ஒரு ''லகேச்சர்'' அடையாளம் வலது தாடையில் இருந்தது பற்றி பி.சா. 12 ஆகிய மருத்துவர் அவருடைய சாட்சியத்திலும் சா. ஆ. பி. 14 பிரேத பரிசோதனைச் சான்றிதழில் எதுவும் குறிப்பிடவில்லை யென்பதை நாம் முக்கியமாக கருத்தில் கொள்ளவேண்டும். பிரேத

விசாரணையின்போது அருகில் இருந்த பஞ்சாயத்தார்களில் ஒருவராகிய பி. சா. 16 ராஜசேகர், குறுக்கு விசாரணையில் சா.பொ. 2 புகைப்படத்தில் தெரிகிறபடி தாடையின் அடிப்பாகத்தில் கழுத்தில் கன்னிபோன காயம் தெரிந்தது என்றும், அதே படத்தில் இடது தடையில் காயம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிற காயத்தை தான் தூரத்தில் இருந்து பார்த்ததால் அப்போது கவனிக்கவில்லை யென்றும் சொல்லுகிறார். மேலும் அவர் கோர்ட்டார் கேட்ட கேள்விக்கு பதிலளிக்கையில், பிரேதத்தின் இடது தாடையில் காயம் இருந்ததைப் பார்த்ததாகவும், அவ்வாறு பார்த்தபோது இடது தாடையில் பிரேதம் மேழே இருந்தபோது எடுக்கப்பட்டுள்ள புகைப்படத்தில் தெரிகிறபடி ஒரு காயம் இருந்தது என்று ஒப்புக்கொள்கிறார், எனவே பி. சா. 14 மற்றும் பி.சா. 16 ஆகிய சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்து இறந்துபோன தெய்வமணியின் இடது தாடையில் காயம் ஏற்பட்டிருந்தது என்பது தெள்ளத் தெளிவாகிறது. இந்தக் காயம் எவ்வாறு ஏற்பட்டது என்று சற்றேனும் விளக்கப்பட வில்லை. ஆகவே, இறப்பதற்கு முன்பு தெய்வ மணி துன்புறுத்தப்பட்டு தாக்கப்பட்டிருக்கலாம் என்று சொன்னால் அதை நாம் மறுக்கமுடியாத நிலையில் இருக்கிறோம். பி.சா. 12 ஆக விசாரிக்கப்பட்டுள்ள மருத்துவர் இட்து தாடையில் ஏற்பட்டுள்ள காயத்தைப் பற்றி எதுவும் சொல்லாமல் இருப்பது வித்தையாகவே இருக்கிறது. மேலும் பி.சா. 12, தெய்வமணி அணிந்திருந்த உடைகளையும், ''சரசரா''வையும், ரசாயன பரிசோதனைக்கு அனுப்பி விவரம் தெரிந்து கொள்ள முயற்சிக்கவில்லை.

34. 15–3–1983 அன்று மாலை 4–30 மணியளவில் தெய்வமணி உயிரற்ற நிலையில் தொங்கிக் கொண்டிருந்ததைக் கண்டவுடன், எ.சா. 4 காவலர் பெருமாள் சட்ட ஒழுங்கு உதவி ஆய்வாளர் எ.சா. 6-க்கு உடனே செய்தி சொல்லி அனுப்பி தனி அறிக்கை சா. ஆ. பி. 16 கொடுத்துள்ளார். ஆகவே தெய்வமணி இறந்த நிலையில் தொங்கிக் கொண்டிருந்தது மாலை 4–30 மணிக்கே தெரிந்தபோதிலும், பி. சா. 14-க்கு இதுபற்றி இரவு 9-45 மணிக்கு செய்தி சொல்லப்பட்டு இரவு 10-30 மணிக்குத்தான் அவர் காவல் நிலையத்தை அடைந்து மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துள்ளார். இத்தகைய நீண்ட காலதாமதத்தைச் சரிக்கட்டும் அளவில் காவலர் தரப்பில் அளிக்கப்பட்டுள்ள சாட்சியம் ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை. இத்தகைய ஒரு காரணம் பி. சா. 14-ன் முன் நடந்த விசாரணையின்போது சொல்லப்படவே இல்லை. ஆகவே இத்தகைய ஒரு காலதாமதத்திற்கான காரணம் இந்த வழக்கிற்காக பொய்யாகக் கூறப்படுகிறது என்று சொன்னால் அதை நாம் மறுக்க முடியாது. பி. சா. 14-ன் இருப்பிடம் யாவருக்கும் தெரிந்த ஒரு இடமாகும். ஆகவே அவருடைய இருப்பிடம் தெரியாத ஒருவர் அனுப்பப்பட்டதால் காலதாமதம் ஏற்பட்டது என்று சொல்வது சற்றும் ஏற்றுக் கொள்ளும் வகையில் இல்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும். மேலும் எ. சா. 6ஐத் தவிர வேறு யாரும் இதுபற்றி விசாரிக்கப்படவில்லை என் பதையும் கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டி யுள்ளது. ஆகவே, கமிஷன் முன்பு எ. சா. 6 முதல் தடவையாகச் சொல்லப்படும் இத்தகைய சாட்சியம் முற்றிலும் பொய்யானதென்றும், அதை ஏற்றுக்கொள்ள முடியாதென்றும் தீர்மானிக் கிறேன்.

35. மேல்சொல்லியபடி ஏற்பட்டுள்ள நீண்ட காலதாமதம் சந்தேகிக்கும் நிலையிலேயே இருக் கிறது. ஏனெனில் இந்த நீண்ட அளவு காலத்தில் காவல் நிலையத்தில் என்ன நடந்தது என்று காவலர்கள் தரப்பில் சாட்சியம் எதுவும் அளிக்க முயற்சிக்கவே இல்லை. மாறாக, காவல் நிலையத்திற்கு வெளியில் சிச்சிப்பாளையத்தைச் சார்ந்தவர்கள் நிறையக் கூடி காவல் நிலையத்திற்கு செல்ல முயற்சி செய்ததை தடுக்கும் வகையில் ''ரிசர்வ்'' காவலர்களின் பந்தோபஸ்து இருந்தது என்று தெரிகிறது. சாதாரணமாக காவலர்கள் சொல்லும் வகையில் இத்தகைய ஒரு சம்பவம் ஏற்பட்டிருந்தால், சிச்சிப்பாளையத்தைச் சார்ந்த எல்லோரும் இத்தகைய ஒரு பதட்டமான நிலையில் இருந்திருக்கவேண்டிய அவசியமில்லை. இங்கு முக்கியமாக கவனிக்கவேண்டியது என்னவென்றால் பிரேத விசாரணையில் சிச்சிப்பாளையத்தைச் சார்ந்த நபர்கள் யாரும் கலந்துக்கொள்ளவில்லை யென்பதே ஆகும். அது மட்டுமின்றி, சம்பவ இரவு அன்றே தெய்வமணியின் இறப்பு பற்றி சந்தேகித்த பொதுமக்கள் முதலமைச்சருக்கும், மற்ற அரசியல் தலைவர்களுக்கும், உயர் அதிகாரி களுக்கும் தந்தி கொடுத்திருக்கிறார்கள் என்று ஏற்கனவே எடுத்துக்காட்டியிருக்கிறேன்.

36. எ. சா. 4 பெருமாளின் சாட்சியம் உள்ளிப் பாக கவனித்துப் பார்க்கும்போது ஏற்றுக்கொள் ளும் வகையில் இல்லை. இவர் ஒருவர்தான் காவல் நிலையத்தில் சம்பவ சமயத்தின்போது இருந்தார் என்று எடுத்துக்கொண்டாலும், அவர் அந்த சமயத்தில் ''ஓயர்லஸ்'' கருவிக்குப் பக்கத் தில் அமர்ந்துகொண்டு ''லாக்கப்'' அறையில் என்ன நடந்தது என்று கவனிக்க முடியாத நிலையில் இருந்தார் என்று சொல்லுவது ஏற்றுக் கொள்ளும் வகையில் இல்லை. ''ஓயர்லஸ்'' கருவி காவல் நிலையத்திலுள்ள ஹாலில் இருந்த எந்தப் பாகத்திலிருந்தும் உடனே அடையக்கூடிய குறுகிய தூரத்தில்தான் இருக்கிறது. ஆகவே அதன் அருகாமையிலேயே உட்கார்ந்துக்கொண்டு ஏதாவது செய்தி வருமாவென்று அதிலேயே கவனத்தைச் செலுத்திக்கொண்டிருந்ததாகச் சொல் வது ஒத்துக்கொள்ள முடியாது. மேலும், இடை யிடையே ''லாக்கப்'' ரூமைப் பார்த்ததாகச் சொல்லும் எ. சா. 4 வெளிப்புற வராந்தாவிற்குச் சென்று பார்த்ததாகத்தான் சொல்கிறார். இதுவும் மிகைப்படுத்திச் சொல்வதாகவே இருக்கிறதே

யொழிய இயற்கையாக இல்லை. காவல் நிலையத்திலுள்ள ''லாக்கப்'' அறையில் என்ன நடக்கிறது என்று பார்ப்பதற்காகவே ''லாக்கப்'' அறையின் கதவில் இரு துவாரங்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இத் துவாரங்கள் மூலம் ''ஒயர்லஸ்'' கருவி வைத்திருக்கும் ஹாலிலிருந்தே ''லாக்கப்'' அறைக்குள் என்ன நடக்கிறது என்று பார்க்கலாம். ஆகவே சாதாரணமாக ''லாக்கப்'' அறையில் ஏதாவது ஒரு சிறிய சத்தம் ஏற்பட்டாலும் எ.சா. 4 பெருமாள் அதை கவனிக்கக் கூடிய நிலையில்தான் இருந்திருப்பார் என்று சொன்னால் அதை நாம் மறுக்க முடியாது. எ. சா. 4-ன் சாட்சியம் இந்த வகையில் இல்லாது முற்றிலும் மாறாகச் சந்தேகப்படும் நிலையிலேயே இருக்கிறது. ஆகவே, காவல் நிலையத்தில் நடந்ததை மறைத்து எ. சா. 4 கற்பனையாக பொய்சாட்சி சொல்ல முனைந்துள்ளார் என்று தீர்மானிக்கிறேன். இவருடைய இத்தகைய சாட்சி, பொய்யாக இருப்பதுடன், காவல் நிலையத்தில் நடந்தவை மறைக்கும் வகையில் அமைந்திருக்கிறது என்றே கருதுகிறேன்.

37. சா. பொ. 3 சேலையின் இரு முனைகளையும் சா. பொ. 2 வரிசை புகைப்படங்களில் கண்டுள்ளபடி முடிச்சு போட்டு கட்டி சேலையின் நடுப்பாகத்தை கழுத்தில் சுற்றி தூக்கிட்டுக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. ஜன்னலின் கம்பி பாகத்திலும், கதவின் தாழ்ப்பாள் பாகத்திலும் காணப்பட்டுள்ள இந்த முடிச்சுகள் இரண்டும் ஒரே மாதிரி போடப்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இங்கே குறிப்பாக கவனிக்க வேண்டியது என்ன வென்றால் இரு நுனியிலும் ஒரே மாதிரியான ஒரே ஒரு முடிச்சுதான் போடப்பட்டிருக்கிறது என்பதாகும். மேலும், இவ்வாறு போடப்பட்டுள்ள அந்த முடிச்சுக்கள் இரண்டும் சாதாரணமாக தெய்வமணி போன்ற பழக்கம் இல்லாதவர்கள் போடும் முடிச்சாகத் தெரியவில்லை. காவலர்களுக்கு எதிராக வழக்காடிய வழக்கறிஞர் திரு. பி. வி. கோவிந்தராஜன் அவர்கள் இந்த இரண்டு முடிச்சுக்களும் காவலர்களுக்கு காவலர் பயிற்சியின்போது சொல்லிக்கொடுக்கப்படும் சிறப்பு முடிச்சு என்றும், அவ்வாறு சிறப்பு முடிச்சு போடத்தெரிந்தவர்கள்தான் பயிற்சியின் நிறைமை காரணமாக ஒரே முடிச்சு மட்டும் போட்டால் போதும் என்ற வகையில் ஒரே ஒரு முடிச்சுடன் விட்டிருக்கிறார்கள் என்றும், இத்தகைய ஒரே முடிச்சுமட்டும் சாதாரணமாக தூக்குப்போட்டுக் கொள்ள வேண்டும் என்று நினைக்கும் தெய்வமணி போன்றவர்கள் போட்டிருக்கமாட்டார்கள் என்றும், தெய்வமணி போன்றவர்கள் சந்தேகத்தின் காரணமாகவும், பயத்தின் காரணமாகவும் ஒவ்வொரு முனையிலும் ஒரு தடவைக்குமேல் முடிச்சுப் போட்டிருப்பார்கள் என்றும், மேலே சொல்லியபடி ஒரே ஒரு சிறப்பு முடிச்சு போடப்பட்டதிலிருந்தே காவலர்கள் இத்தகைய செய்கையில் சம்பந்தப்பட்டிருப்பார்கள் என்று தெளிவாகத் தெரிகிறதென்று நீண்டதொரு வாதத்தை எழுப்பினார். அவருடைய இத்தகைய வாதம் இந்த வழக்கில் உள்ள சூழ்நிலைகளிலிருந்து பார்க்கும்போது முற்றிலும் ஏற்றுக் கொள்ளும் வகையிலேயே இருக்கிறது என்று கருதுகிறேன். இங்கு முக்கியமாகக் கவனிக்கவேண்டியது என்னவெனில், நீண்ட காலதாமதமாக மேற்கொண்டு நடவடிக்கை எடுத்துக்கொள்ள வரவிருக்கும் பி. சா. 14க்கு தெய்வமணியின் சாவுபற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளதேயாகும். இத்தகைய நீண்ட காலதாமதத்திற்கு விளக்கம் ஏற்றுக்கொள்ளும் வகையில் இல்லை. ஆகவே இத்தகைய நீண்ட காலதாமதம் உடம்பின் பளுவின் காரணமாக கழுத்தில் ''லகேஷன்'' அடையாளம் ஏற்படத்தான் செய்யப்பட்டது என்று சொன்னால் அதை நாம் இந்த வழக்கில் உள்ள சூழ்நிலைகளிலிருந்து மறுக்க முடியாது.

38. சா. பொ. 2 வரிசை புகைப்படங்களிலிருந்து பார்க்கும்போது இறந்துபோன தெய்வ மணியின் கைகளும், கால்களும், குறிப்பாக முக பாவமும் சுருக்கு போட்டுக்கொண்டு சுருக்கின் காரணமாக மூச்சு அடைக்கப்பட்டு, இயற்கைக்கு விரோதமாக உயிர்போயிருக்கிறது என்று காட்டும் வகையில் இல்லை. உயிருக்கு பங்கம் விளைவிக்கும் வகையில் தெய்வமணி வலுக்கட்டாயமாக முயற்சி செய்திருப்பாரேயானால், அவருடைய கால்களும், கைகளும், முகபாவமும் சாதாரணமாக ஆகாயத்தில் தொங்கிக்கொண்டிருப்பதுபோல் எவ்வித ''டென்ஷனும்'' இல்லாமல் இருந்திருக்க முடியாது.

39. எ. சா. 4 பெருமாளின் சாட்சியம் இயற்கையாக இல்லையென்றும், இயற்கைக்கு மாறுபட்டு சந்தேகத்திற்கு இடமளிக்கும் வகையிலேயே அமைந்திருக்கிறது என்றும் ஏற்கனவே எடுத்துக் காட்டியிருக்கிறேன். இச் சந்தர்ப்பத்தில், எ. சா. 3 மோகன்ராமின் சாட்சியத்தையும், துருவிப்பார்க்கும்போது அவர் சம்பவ தினத்தன்று பிற்பகலில் கிச்சிப்பாளையம் காவல் நிலையத்திற்கே வந்திருக்கமாட்டார் என்று சொல்ல முடியாது என்றே கருதுகிறேன். இவரும் மற்றொரு காவலராகிய பச்சியப்பனும் காவல் நிலையத்திலிருந்து குறிய தூரத்திலுள்ள நீதித் துறை முதல் வகுப்பு முதலாவது எண் நடுவரின் மன்றத்திற்கும் கிளைச் சிறைச்சாலைக்கும் சென்றிருக்கிறார்கள். கிளைச் சிறைச்சாலையில் சம்பந்தப்பட்ட கைதிகளை பிற்பகல் 2·25 மணிக்கு ஒப்படைத்துவிட்டு திரும்பி வந்துள்ளார்கள். அதன் பிறகு அவர்கள் ஒரு குறிப்பிட்ட காரணத்தால் காவல் நிலையத்திற்கு வர முடியாத நிலையில் இருந்திருந்தார்கள் என்று காட்ட சாட்சியம் எதுவும் அளிக்கப்படவில்லை. இங்கு குறிப்பாக கவனிக்கவேண்டியது என்ன வென்றால், காவலர்கள் தரப்பில் அளிக்கப்பட்டுள்ள சாட்சியங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் எ. சா. 4 பெருமாளைத் தவிர மற்ற காவலர்களும், ஆய்வாளர்களும், 15–3–1983 அன்று மாலை சுமார் 3 மணியிலிருந்து மாலை

சுமார் 4·30 மணி வரை காவல் நிலையத்தில் அலுவல் சம்பந்தமாக இருக்கவில்லையென்றாலும், சாதாரணமாக சொந்தவிஷயமாக விரும்பினால் வந்துபோயிருக்கவே முடியாதென்று அனுமானிக்கவே முடியாதென்று சொல்லமுடியாது. எ.சா. ஆ. 6ல் இருந்து எ. சா. 3 வேறு வெளி அலுவல் காரணமாக காவல் நிலையத்தில் 15–3–1983 அன்று காவல் வேலை காரணமாக இருந்திருக்க மாட்டார் என்று தெரிகிறதே தவிர, அன்று அவர் மாலை சுமார் 3 மணிக்குமேல் மாலை சுமார் 4·30 மணிக்குள் தன் சொந்த விருப்பப்படி சொந்தக்காரியமாக அங்கு போயிருக்கவே முடியாது என்று தீர்மானமாகச் சொல்ல முடியாது. குறிப்பாக சொல்லுமிடத்து, எ. சா. 4 பெருமாளை தவிர மற்ற காவலர்களும், ஆய்வாளர்களும், மேலே குறிப்பிட்ட முக்கிய கால அளவில் காவல் நிலையத்தைத் தவிர வேறு எந்த குறிப்பிட்ட இடத்திலாவது குறிப்பிட்ட வேலையின் காரணமாக இருந்தார்கள் என்றும் சாட்ட காவலர்கள் தரப்பில் சாட்சியம் எதுவும் அவிக்கப்பட வில்லை என்பதே ஆகும். மேலும், சொந்தக் காரியமாக, காவலர்களும், ஆய்வாளர்களும் வேறு அலுவல் காரணமாக காவல் நிலையத்திற்கு வெளியில் இருக்கும்போது காவல் நிலையத்திற்குள் வந்துபோனால், அவ்வாறு வந்துபோனது பற்றி காவல் நிலையத்தில் உள்ள பதிவேடுகளில் குறிக்கப்படமாட்டாது என்று காவலர்கள் தரப்பில் ஒத்துக்கொள்ளப்படுகிறது.

40. பி. சா. 1 பேச்சியம்மாள் அவளுடைய சாட்சியத்தில் 15–3–1983 அன்று பிற்பகல் சுமார் 2 மணி அளவில் கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில், எ. சா. 3, 5 மற்றும் காவலர் சின்னுசாமி ஆகியோர் தெய்வமணியை விசாரித்துக்கொண்டு இருந்ததைப் பார்த்ததாகச் சொல்லியுள்ளாள். அவள் கால அளவை உத்தேசமாகத்தான் சொல்லியிருக்கிறாள். எனவே இவருடைய சாட்சியத்திலிருந்து மாலை சுமார் 3 மணி அளவில் (இதுவும் மிக மிக உத்தேசமாகத்தான் குறிக்கப்பட்டுள்ளது, ஏனெனில் பி.சா. 12 டாக்டரின் சாட்சியமும் சுமார் ஒரு மணிநேரத்தியாசத்தில் அமைந்திருக்கலாம்) மற்ற காவலர்களும், காவல் நிலையத்தில் இருந்திருக்கலாம் என்றே தெரிகிறது. பி. சா. 1 பேச்சியம்மாள் ஏற்கனவே பி. சா. 14-வது சாட்சியின் முன் விசாரிக்கப்பட்டபோது இதுபற்றிச் சொல்லாத தால், இவளுடைய இத்தகைய சாட்சியத்தை நாம் உண்மையென்று ஏற்றுக்கொள்ள முடியாதென்று காவலர்கள் தரப்பில் வழக்காடிய வழக்கறிஞர் திரு. எஸ். பார்த்தசாரதி அவர்கள் நீண்ட ஒரு வாதம் எழுப்பினார். அவர் வாதத்தை ஏற்றுக் கொள்ள முடியது. பி. சா. 14-வது சாட்சி விசாரணை நடத்துவதற்கு முன்னரே தெய்வமணி தூக்கில் தொங்கி மூச்சடைப்பு ஏற்பட்டதால் மரணம் அடைந்தாள் என்று தீர்மானித்து முதல் கட்ட அறிக்கை வழங்கியுள்ளார். இது எல்லோருக்கும் தெரிந்தே இருந்தது. ஆகையால், அவர் முன்பு சாட்சியம் அளிக்கும்போது பி. சா. 1 15–3–1983 பிற்பகல் சுமார் 2 மணியளவில் காவல் நிலையத்திற்கு போனது பற்றி சொல்லாமல் இருந்தது எந்தவிதமான இழுக்கிற்கும் இடமாகாது. பி. சா. 1 அவரிடம் அப்போது சாட்சியம் அளித்தபோது குறிப்பாக எந்தக் காவலர்மீதும் சாட்சியம் அளிக்க யாரும் முன்வரவில்லை. பி. சா. 1 பேச்சியம்மாளின் சாட்சியம் இயற்கையாகவும், நம்பத் தகுந்தவகையிலும் இருப்பதாகத் தெரிவதால் அவருடைய சாட்சியத்தை நான் முற்றும் உண்மையான சாட்சியம் என்று ஏற்றுக்கொண்டு, மேலே சொல்லிய காரணங்களால், 15–3–1983 அன்று மேலே சொல்லிய முக்கியமான சமயத்தில் எ. சா. 4 பெருமாள் தவிர வேறு காவலர்களும் மற்றும் உதவி ஆய்வாளர்களும் காவல் நிலையத்திலிருந்திருக்க முடியாது என்று உறுதியாகச் சொல்லமுடியாது என்றே தீர்மானிக்கிறேன்.

41. எ. சா. 3 மோகன்ராம், எ. சா. ஆ. 6 கடவுச் சீட்டை மேலதிகாரிகளிடமிருந்து உத்திரவு எதும் பெறாமலேயே தன் பொறுப்பிலேயே வைத்துக்கொண்டிருந்திருக்கிறார். குறுக்கு விசாரணையில் இவர் எ. சா. ஆ. 6 கடவுச் சீட்டை விசாரணையின்போது தனக்கு தேவைப்படும்என்று எடுத்து வைத்திருந்ததாக ஒத்துக்கொள்கிறார். இந்தக் கடவுச் சீட்டில் எ. சா. 3 கையெழுத்து போட்டிருக்கிறார். மற்றொரு காவலராகிய பிச்சை இதில் கையெழுத்து போடவில்லை. பிச்சையின் கையெழுத்து இதில் இல்லாமல் இருப்பதற்கு ஒத்துக்கொள்ளும் வகையில் காரணம் எதுவும் அளிக்கப்படவில்லை. காவலர்களுக்கு எதிராக வழக்காடிய வழக்கறிஞர் திரு. பி. வி. கோவிந்தராஜ், எ. சா. 3-ன் இத்தகைய நடவடிக்கை, ஆரம்பத்திலிருந்தே தன்னை இந்த வழக்கிலிருந்து எவ்வகையிலாயினும் விடுவித்து கொள்ளவேண்டும் என்ற பெரு முயற்சியில் ஈடுபட்டு இருந்ததைத் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது என்றும், அத்தகைய எண்ணம் குற்றம் புரிந்த காரணத்தினால்தான் உறுத்தும் வகையில் இருந்துவந்தது என்றும், எ. சா. 3-ன் வீட்டு சாமான்களும் 15–3–1983-க்கு முன்பேயே திருட்டு போயிருந்ததால் எ. சா. 3-க்கு தெய்வமணி பேரில் ஒரு கண் இருந்தது என்றும், அவளை விசாரித்து தன்னுடைய திருட்டு வழக்கில் மேலும் பல உண்மைகளை தெரிந்துகொள்ள வேண்டும் என்று அவருக்கு உள்நோக்கம் இருந்திருக்கும் என்றும், அதனால் அவர் மேலே சொல்லிய குறிப்பிட்ட நேரத்தில் தெய்வமணியை விசாரித்து தெய்வ மணிக்கு திங்கு விளைவித்து தெய்வமணியின் இறப் பிற்கு காரணமாக இருந்திருப்பார் என்றும் நீண்ட ஒரு வாதத்தை என்முன் எழுப்பினார். அவருடைய இத்தகைய வாதத்தை மறுக்கவோ நிராகரித்துவிடவோ முடியாது. எ.சா. 3-ன் சாட்சியத்திலிருந்து 15–3–1983 அன்று ரிமாண்டுக்கு அனுப்பிய இரு கைதிகளும் அவருடைய வீட்டில் திருட்டுப்போன குற்றம் பற்றிய வழக்கைச்

சேர்ந்தவர்கள் என்று தெரிகிறது. ஆகவே, எ. சா. 3-ன் வீட்டு சாமான்கள் சம்பந்தமான இத்தகைய ஒரு வழக்கு விசாரணையை எதிர் நோக்கி இருக்கும்போது, காவல் நிலையத்தில் இருக்கும் தெய்வமணியை விசாரிக்க எ. சா. 3 காவல் நிலையத்திற்குச் சென்றிருக்கலாம் என்றே தெரிகிறது. இதன் காரணமாகத்தான் எ.சா. 3, எ. சா. ஆ-6 கடவுச்சீட்டை தனக்கு ஆதரவாக இருக்க வேண்டும் என்று ஆரம்பத்திலிருந்து தன்னிடமே மேற்சொன்ன வகையில் வைத்திருக்கிறார். மேலும் எ. சா. 3-ன் வீட்டில் என்ன என்ன சாமான்கள் திருட்டுப்போயின என்று காட்டவும், திருட்டுப் போன சாமான்கள் எல்லாம் கிடைத்துவிட்டனவா என்று காட்டவும், ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை. எல்லாச் சாமான்களும் கிடைத்துவிட்டதாக வாய் மொழியாக மட்டும் எ. சா. 3 மற்றும் எ. சா. 5 சாட்சியம் அளித்திருப்பது இந்த வழக்கிலுள்ள சூழ்நிலையிலிருந்து ஏற்றுக்கொள்ளமுடியாத நிலையில் இருக்கிறது.

42. மேற்கூறிய காரணங்களாலும், மற்றும் இவ்வழக்கிலுள்ள ஏனைய சூழ்நிலைகளிலிருந்தும், 15–3–1983 அன்று தெய்வமணி கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் காவலில் இருக்கும்போது சந்தேகப்படும் சூழ்நிலையில் இருந்துள்ளார் என்றும், 15–3–1983 அன்று தெய்வமணி கிச்சிப் பாளையத்திலுள்ள 'லாக்கப்' அறையில் சா.பொ. 3 புடவையால் கழுத்தைச் சுற்றி தூக்குப் போட்டுக்கொண்டு சா. பொ. 2 வரிசை புகைப் படங்களில் கண்டுள்ளபடி மரணத்தை விளைவித் துக்கொள்ளவில்லையென்றும் தீர்மானிக்கிறேன்.

43. தெய்வமணி, சா. பொ. 2 வரிசை புகைப் படங்களில் கண்டுள்ளபடி சா. பொ. 3 புடவையை கழுத்தில் சுற்றி தூக்கிவிட்டு உயிரை மாய்த்துக்கொண்டார் என்று சொல்வது, தெய்வ மணிக்கு கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் காவலர்களால் ஏற்பட்ட மரணத்தை மறைக்க பொய்யாக நடிக்கப்பட்டுள்ள நாடகம் என்றே கருதுகிறேன். இவ்வண்ணமே கேள்வி எண் 1-க்கு காவலர்களுக்கு எதிராக பதில் அளிக்கிறேன்.

44. கேள்வி எண் 2.—பி. சா. 1 முதல் பி. சா. 17 சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், மற்றைய ஆவணங்களிலிருந்தும் மேலே சொல்லிய படி தெய்வமணிக்கு மரணம் ஏற்பட்டதற்கு யார் காரணமாக இருந்தார்கள் என்று எதுவும் சற்றேனும் புலனாகவில்லை. தெய்வமணிக்கு எவ்வாறு, எப்படி, எங்கு, இங்கு விளைவிக்கப் பட்டது என்று காட்டவும் சாட்சியம் எதுவும் இந்த கமிஷன் முன்பு அளிக்கப்படவில்லை. ஆகவே, தெய்வமணி இறப்பதற்கு முன்பு கற்பழிக்கப் பட்டாளா என்றும் யாரால் அவ்வாறு கற்பழிக் கப்பட்டாள் என்றும் தீர்வுகாணமுடியாத நிலையில் இருக்கிறேன்.

45. சாதாரணமாக கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் 15–3–1983-ம் தேதி என்ன நடந்தது என்று தெரிய காவலர்களுக்கு எதிராக சாட்சி சொல்லியுள்ள சாட்சிகளுக்கு எதுவும் தெரிந்திருக்க முடியாது. அங்கு என்ன நடந்தது, தெய்வமணிக்கு எவ்வாறு மரணம் ஏற்பட்டது, தெய்வமணி கற்பழிக்கப்பட்டாளா என்ற விவரங் கள் காவல் நிலையத்திலுள்ள காவலர்களுக்கும் மற்றும் அங்கே சம்பவ சமயம் வேலை பார்த்தவர் களுக்கும் மட்டுமே தெரிந்திருக்கக்கூடிய ஒரு செயலாகும். ஆகவே, தெய்வமணி கற்பழிக்கப் பட்டாளா என்பது பற்றியும், தெய்வமணி எந்த சூழ்நிலையில் கொல்லப்பட்டாள் என்பது பற்றியும் தீவிர புலன் விசாரணைக்கு பிறகேதான் நாம் அறிந்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. தெய்வ மணி சந்தேகப்படும் சூழ்நிலையில் காவல் நிலையத் தில் காவலில் இருக்கும்போது கொல்லப்பட்டிருக் கிறாள் என்றும், தெய்வமணி தன்னிச்சையாக தானே தூக்கு போட்டுக்கொண்டு மூச்சு அடைப் பின் காரணமாக உயிரை மாய்த்துக்கொள்ள வில்லையென்றும் தெளிவாக எடுத்துக்காட்டியிருக் கிறேன். தெய்வமணி இத்தகைய சூழ்நிலையில் உயிர்நீத்திருக்கிறாள் என்று தெரிவதால் அரசு இதுபற்றி ஒரு பொறுப்புள்ள, நேர்மையும் நிறமை யும் வாய்ந்த உயர்மட்ட காவல் துறை அதிகாரியை நியமித்து தீவிர புலன் விசாரணை செய்து உண் மையை அறியவேண்டியது அவசியமாகும், நியாய மாகவும் இருக்கிறது.

46. எனவே, தெய்வமணி இறப்பதற்கு முன் கற்பழிக்கப்பட்டாளா என்று இந்த விசாரணையில் புலனாகவில்லையென்றும், இது பற்றி தீவிர விசா ரணைக்கு பிறகு இது சம்பந்தமாக தக்க நட வடிக்கைகள் எடுத்துக்கொள்ளப்பட வேண்டியது அவசியம் என்று தீர்மானித்து இந்த கேள்விக்கு அவ்வண்ணமே பதிலளிக்கிறேன்.

47. கேள்வி எண் 3.—15–3–1983 அன்று தெய்வமணி காவல் நிலையத்தில் காவலில் இருக் கும்போது காவலர்கள் யாரும் உத்தியோக முறை யில் அவளிடம் தகாத முறையில் நடந்துகொள்ளக் கிடையாது. உத்தியோக முறையில் அவளிடம் தகாத முறையில் நடந்துகொள்ள வாய்ப்பு எது வும் இல்லை. அங்கு அதுசமயம் சந்தேகப்படும் நிலையில் நடந்தவைகள் யாவும் காவலர்களின் தனிப்பட்ட செயல்களையே குறிக்கின்றன. ஆகவே காவலர்கள் தனிப்பட்ட முறையிலும், நல்ல நிறனும், நிடமும் படைத்தவர்களாக இருந் தாலேயொழிய இத்தகைய சந்தேகப்படும் நட வடிக்கைகள் நடவாமல் இருக்காது. எனவே, காவல் நிலையத்தின் பொறுப்பில் இருக்கும் அதி காரிகள் இத்தகைய சந்தேக நடவடிக்கை நடக்க இடம் கொடுக்காமல் காவலர்களை கண்டிப்பான முறையில் நடந்துகொள்ள வழிவகுக்க வேண்டும். அவ்வாறு காவலர்கள் நடந்துகொள்கிறார்களா என்பதையும் கண்ணும் கருத்துமாக கவனித்துக் கொள்வது அவசியமாகிறது.

48. 15–3–1983 அன்று தெய்வமணிக்குப் பெண் நபர் ஒருவர் உதவியாக இல்லாததால்தான் இத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. ஆகவே ஒவ் வொரு காவல் நிலையத்திலும் பெண் அல்லது பெண்கள் காவலில் இருக்கும்போது கண்டிப்பாக ஒரு பெண் நபர் துணைக்கு காவலாக எப்போதும் இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அவ் வாறு ஏற்பாடு செய்ய இயலாமல் போய்விட்டால் பெண் காவலர்கள் இருக்கும் இடத்திற்கு காவலுக் காக தெய்வமணி போன்ற கைதிகளை அனுப்பி காவலில் இருக்கும்படி செய்யலாம். இது சம்பந்த மாக தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு பி.எஸ்.ஒ.–வில் மேல்கண்ட வகையில் பெண்களுக்கு வேண்டிய பாதுகாப்பு அளிக்க வழிவகுக்க வேண் டும்.

49. இறுதியாக, தெய்வமணி சா. பொ. 2 வரிசை புகைப்படங்களில் கண்டுள்ளபடி சா.பொ. 3 புடவையை கழுத்தில் சுற்றி தூக்கிலிட்டு உயிரை மாய்த்துக்கொண்டாள் என்று சொல்வது, தெய்வ மணிக்கு இச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் காவலர்களால் ஏற்பட்ட மரணத்தை மறைக்க பொய்யாக நடிக்கப்பட்டுள்ள நாடகம் என்றே கருதுகிறேன். இது சம்பந்தமாக பொறுப்புள்ள காவல் துறை உயர்மட்ட அதிகாரி ஒருவரை நியமித்து புலன் விசாரணை செய்து தகுந்த நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று தமிழ் நாடு அரசுக்கு நான் பரிந்துரை செய்கிறேன். தமிழ் நாடு அரசு இனிமேல் இத்தகைய சம்பவம் காவல் நிலையத்தில் நடவாமல் இருக்க மேற் சொல்லியபடி வேண்டிய மேலான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டு பி.எஸ்.ஒ.–வில் அதற்குத்தகுந்த மேலான உத்திரவுகளை வெளியிடவேண்டிய ஏற் பாடுகளைச் செய்ய முன்வர வேண்டும் என்றும் பரிந்துரை செய்கிறேன். மேல் சொல்லிய உயர் மட்ட காவல் துறை அதிகாரியின் புலன் ஆய்வும், பி.எஸ்.ஒ–வில் வெளியிட வேண்டிய உத்தரவுகளும் அதிவிரைவில் காலதாமதம் இல்லாமல் நடக்க வேண்டியது எவ்வகையிலும் அவசியமாகும் என்பதையும் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

50. முடித்துக் கொள்வதற்கு முன் இந்த கமிஷன் விசாரணை நல்ல முறையில் விசாரணைத் தினங்களில் தங்கு தடையின்றி நடைபெற்றமைக்கு பெரிதும் உதவியாக இருந்து எனக்கு உள்ளன்புடன் கூட இருந்து ஒத்துழைத்த சேலம் மாவட்ட ஆட்சி யாளர் அலுவலகத்தைச் சார்ந்த திருவாளர்கள் கே. வரதராஜுலு, தலைமை உதவியாளர், 'சி' பிரிவு, எஸ். மாதேசன், உதவியாளர் (5 பிரிவு), என். தங்கராஜு, சுருக்கெழுத்து தட்டச்சர், ஆகியோர்களுக்கும், சேலம் கோட்டாட்சியாளர் அலுவலகத்தைச் சார்ந்த திருவாளர் பி. கே. ராஜன், தட்டச்சர் அவர்களுக்கும், சேலம் மாவட்ட நீதிமன்றத்தைச் சார்ந்த திருவாளர்கள் எ. தியாகராஜன், இளநிலை உதவியாளர், திரு.ஆர். வெங்கடசுப்பிரமணியன், உதவியாளர், அ. ஜனார் தனன், உதவியாளர், மற்றும் எஸ். ஸ்ரீதரன், தட்டச்சர் ஆகியோர்களுக்கும், எனது உளம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், சேலம் மத்திய கூட்டுறவு வங்கியின் பேரவைக் கூட்ட ஹாலில் விசாரணை நல்ல முறையில் சிறப் பாக நடக்க வேண்டிய ஏற்பாடுகளை செய்து கொடுத்த சேலம் மாவட்ட ஆட்சியர் திரு. ஆர். வரதராஜுலு அவர்களுக்கும், வங்கியின் செயலா ளர் திரு. எ. ஆர். நாச்சிமுத்து அவர்களுக்கும், சேலம் மாவட்ட காவல்துறை கண்காணிப்பாளர் திரு. ஆர். விஜயகுமார் அவர்களுக்கும் எனது பாராட்டுக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

(ஒம்) **A. M. நஞ்சப்பன்,**
ஒரு நபர் கமிஷன்,
30–9–1983.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

110 G–4—4

காவலர்களுக்கு எதிராக விசாரிக்கப்பட்ட சாட்சிகள்—

பி. சா. 1	பேச்சியம்மாள்.
பி. சா. 2	சத்தார்.
பி. சா. 3	கோட்டை மாரி.
பி. சா. 4	மொட்டையாண்டி.
பி. சா. 5	வசந்தா ரத்தினவேலு.
பி. சா. 6	செல்லம்மாள்.
பி. சா. 7	பாலாஜி.
பி. சா. 8	ரவி.
பி. சா. 9	எம். எஸ். தனபால்.
பி. சா. 10	ஆர். சுப்பிரமணியம்.
பி. சா. 11	எல்லம்மாள்.
பி. சா. 12	டாக்டர் சியாமளா, பெண் மருத்துவர், அரசினர் தலைமை மருத்துவமனை, சேலம்.
பி.சா. 13	கே. எஸ். அர்த்தனாரி.
பி. சா. 14	திரு. ஜீவரத்தினம், கோட்டாட்சித் தலைவர், சேலம்.
பி. சா. 15	திரு. ஆர். வெங்கடபதி.
பி. சா. 16	திரு. பி. எல். எஸ். ராஜசேகர்.
பி. சா. 17	திரு. வரதராஜுலு, மாவட்ட ஆட்சித் தலைவர்.

காவலர்கள் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்—

எ.சா. 1	மீனாட்சிசுந்தரம், இளநிலை உதவி ஆய்வாளர், நீ. து. மு.வ. நடுவர் நீதிமன்றம், சேலம்.
எ.சா. 2	வண்முகசுந்தரம், ஜெயில் வார்டர்.
எ.சா. 3	மோகன்ராம், காவலர் எண் 1602.
எ.சா. 4	பெருமாள், காவலர் எண் 2472.
எ.சா. 5	ரங்கசாமி, காவல் துறை உதவி ஆய்வாளர் (குற்றப் பிரிவு) இச்சிப்பாளையம் காவல் நிலையம்.
எ.சா. 6	திரு. சந்திரன், காவல் துறை உதவி ஆய்வாளர் (சட்டம் மற்றும் ஒழுங்கு).

காவலர்களுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருக்கும் சான்றாவணங்கள்—

சா.ஆ.பி. 1, 15–3–1983	பி.சா. 1, இறந்த தெய்வமணியின் பேரில் கொடுத்த புகார்.
சா.ஆ.பி. 2, 15–3–1983	எவர்சில்வர் தட்டை கைப்பற்றியதற்காக தயார் செய்யப்பட்ட 95 நமூனா.
சா.ஆ.பி. 3. 15–3–1983.	பி. சா. 3, தமிழ்நாடு முதலமைச்சருக்கும் மற்றவர்களுக்கும் அனுப்பிய தந்தியின் நகல்.
சா.ஆ.பி. 4.	பி. சா. 4-ம் மற்றவர்களும் தெய்வமணியின்சாவு குறித்து விசாரிக்கக் கோரி பி.சா. 17 மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அனுப்பிய விண்ணப்பம்.
சா.ஆ.பி. 5	பி.சா. 4-ம் மற்றவர்களும் தெய்வமணியின் சாவு குறித்து விசாரணை நடத்தக் கோரி பி. சா. 17-க்கு அனுப்பிய விண்ணப்பம்.
சா.ஆ.பி. 6	பி. சா. 17 மூலமாக முதலமைச்சருக்கு சேலம் அரசியல் கட்சித் தலைவர்கள் தெய்வமணியின் மரணம் குறித்து உயர் நீதிமன்ற நீதிபதி மூலம் நீதி விசாரணை நடத்தக் கோரி அனுப்பிய மனு.
சா.ஆ.பி. 7, 16–3–1983.	பி. சா. 3, பி. சா. 4 மற்றும் ஒரு ராமசாமி ஆகியோர் கோட்டாட்சித் தலைவர் (பி. சா. 14) முன்பு அளித்த வாக்குமூலம்.
சா.ஆ.பி. 8	பி. சா. 4 தெய்வமணியின்சாவு குறித்து பிரேத பரிசோதனைச் சான்றிதழும் மற்றும் ஆவணங்களும் கோரி பி.சா. 14 கோட்டாட்சித் தலைவருக்கு அளித்த மனு.
சா.ஆ.பி. 9, 17–3–1983.	பி. சா. 5, தெய்வமணியின் சாவு குறித்து நீதி விசாரணை நடத்தக்கோரி பி.சா. 17-க்கு அனுப்பிய மனு.
சா.ஆ.பி. 10	தெய்வமணியின் சாவு குறித்து நீதி விசாரணை நடத்தக் கோரி இந்திய தேசிய மாதர் சம்மேளனர், சேலம் மாவட்டக்குழு பிரசுரம் செய்த அறிக்கை.
சா.ஆ.பி. 11, 16–4–1983.	பி. சா. 5, தெய்வமணி சாவு குறித்து விசாரணை நடத்தக் கோரி பி.சா. 17-க்கு அனுப்பிய விண்ணப்பம்.
சா.ஆ.பி. 12, 20– 3–1983.	தெய்வமணியின் சாவு குறித்து விசாரணை நடத்தக் கோரி ''மாலை முரசு'' நாளிதழில் வந்த செய்தி.
சா.ஆ.பி. 13, 16– 3–1983.	பிரேத பரிசோதனை நடத்த பி.சா. 14 கோட்டாட்சித் தலைவர், பி. சா. 12 மருத்துவருக்கு அனுப்பிய கோரிக்கை.
சா.ஆ.பி. 14, 16–3–1983.	தெய்வமணியின் பிரேத பரிசோதனை செய்து பி. சா. 12, மருத்துவர் அளித்த பிரேத பரிசோதனைச் சான்றிதழ்.

சா.ஆ.பி. 15, 15–3–1983. தெய்வமணியின் இறப்பு குறித்து கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை.

சா.ஆ.பி. 16, 15–3–1983. எ. சா. 4, பெருமாள், எ.சா. 6க்கு கொடுத்த தனி அறிக்கை.

சா.ஆ.பி. 17, 16–3–1983. பி. சா. 14, கோட்டாட்சித் தலைவர் தெய்வமணியின் பிரேத விசாரணை நடத்தி தயார் செய்த பிரேத விசாரணை அறிக்கை.

சா.ஆ.பி. 18, 16–3–1983. தெய்வமணியின் பிரேத பரிசோதனைக்காக சா. ஆ. பி. 13 உடன் பி. சா. 14 அனுப்பிய அறிக்கை.

சா.ஆ.பி. 19, 15–3–1983. தெய்வமணி சுருக்கு போட்டுக் கொள்ள உபயோகப்படுத்தியதாகக் கூறப்படும் சா. பொ. 3 புடவை கைப்பற்றிய மகஜர்.

சா.ஆ. பி. 20, 16–3–1983. பி. சா. 17 மாவட்ட ஆட்சித் தலைவர் தெய்வமணியின் இறப்பு குறித்து விசாரணை நடத்த பி.சா. 14 கோட்டாட்சித் தலைவருக்கு அனுப்பிய உத்திரவு.

சா.ஆ.பி. 21, 15–3–1983. கைதிகளை சோதனை போடுவதில் அசுப்படும் சொத்தை பதிவு செய்யும் பதிவேட்டின் பகுதி.

சா.ஆ.பி. 22, 18–3–1983. பி. சா. 13 அர்த்தனாரியும் மற்றவர்களும் பி. சா. 17 மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கொடுத்த மனு.

சா.ஆ.பி. 23 பி. சா. 13 அர்த்தனாரியும் மற்றவர்களும் தெய்வமணியின் சாவு குறித்து பி. சா. 17 மாவட்ட ஆட்சித் தலைவருக்கு கொடுத்த அறிக்கை.

சா.ஆ.பி.24 ஒரு வீரன் என்பவர் மாவட்ட ஆட்சித் தலைவருக்கு தெய்வமணியின் சாவு குறித்து கொடுத்த தந்தி.

காவலர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் :—

சா.எ. 1, 15–3–1983. குற்ற எண் 730-82க்கு சம்பந்தப்பட்ட கைதியை நீதி மன்றக் காவலுக்கு அனுப்பிய அறிக்கை.

சா.ஆ.எ. 2, 15–3–1983. சேலம் தனி கிளைச் சிறைச் சாலைக்கு (ஆண்களுக்கானது) சேர்க்கைப் பதிவேட்டின் 15–3–1983 அன்று மதியம் 2-25 மணிக்கு செய்யப்பட்ட பதிவு.

சா.ஆ.எ. 3, 15– 3–1983. 15–3–1983 அன்று காலை 10 மணிக்கு பாதுகாப்பு காவலர் பணியிலிருந்து விடுவிக்கப் பட்டதற்கான பதிவு.

சா.ஆ.எ. 4, 15–3–1983. காவலர் எண் 1602, கிச்சிப் பாளையம் காவல் நிலையத் திலிருந்து சேலம் நடுவர் மன்றத்திற்கு சேகர்(எ)சந்திர சேகரனை கொண்டுவர மேற் படி கைதியை தன் பொறுப் பில் ஏற்றுக்கொண்டதற்கு கைதிகள் சோதனை பதி வேட்டில் பத்தி 7-ல் உள்ள பதிவு.

சா.ஆ.எ. 5, 15– 3–1983. காவலர் எண் 1270 கிச்சிப் பாளையம் காவல் நிலையத் திலிருந்து சேலம் நடுவர் மன்றத்திற்கு ரஃபிக் பாஷா என்ற கைதியை கொண்டு வர மேற்படி கைதியினை தன் பொறுப்பில் ஏற்றுக் கொண்டதற்கு கைதிகள் சோதனைப் பதிவேட்டில் பத்தி 7இல் உள்ள பதிவு.

சா.ஆ.எ. 6, 15–3 –1983. கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் பச்சியப்பன் மற்றும் எ. சா. 3 மோகன்ராம் ஆகிய காவலர்களுக்கு அளித்த கடவுச் சீட்டு.

சா.ஆ.எ. 7 குற்ற எண் 185, 45/83 வழக்கின் எதிரி ரஃபிக் பாஷாவை நீதிமன்றங்களுக்கு அனுப்பியதற்கான அறிக்கை.

கமிஷனால் குறியிட்ட சான்றாவணம் :—

சி. 1 பி. சா. 4 மொட்டையாண்டியும் மற்றவர்களும் பி. சா. 14 கோட்டாட்சித் தலைவருக்கு அனுப்பிய மனு.

விசாரணையில் குறியிடப்பட்ட சான்றுப் பொருட்கள் :—

சா.பொ. 1 வரிசை	நெகட்டிவ்கள்.
சா.பொ. 2 வரிசை	புகைப்படங்கள்.
சா.பொ. 3	சேலை.
சா.பொ. 4	ஜாக்கெட்.
சா.பொ. 5	பாவாடை.
சா.பொ. 6	சா. பொ. 2 வரிசையி லுள்ள ஒரு புகைப் படத்தின் பிரதி.

அறிக்கையுடன் இணைக்கப்பட்டிருக்கும் ஆவணங்கள் :—

(1) ஆய்வுக் குறிப்பு—21–7–1983 தேதியிட்டது (Not s of Insp ction)

(2) வரைப்படம் எண் 1—(Showing physical f atures of Kitchipalayam Police Station.)

(3) வரைப்படம் எண் 2—(Showing the m asur m nts of th window in th southern wall of the lockup room.)

(4) கமிஷன் விசாரணையின் நாட் குறிப்புகள்.

(ஒப்பம்) A. M. நஞ்சப்பன்,
30–9–1983.
ஒரு நபர் கமிஷன்.

NOTES OF INSPECTION OF KITCHIPALAYAM POLICE STATION

On 21st July 1983, at 10-45 A.M. I inspected Kitchipalayam Police Station. At the time of inspection Thiruvalarkal B. V. Govindaraju, B. V. Srinivasan, S. Parthasarathy, S. Srinivasan and S. Ramanarayanan, Advocates, Thiru K. Vijayakumar, Superintendent of Police, Salem Town, Thiru A. S. Jeevarathinam, Revenue Divisional Officer, Salem were present along with me, apart from the Police personnel who men the Police Station.

2. In my rough plan No. 1 , I have given details regarding relevant physical features of the Police Station. In it, I have also noted the width of the streets which take us to the Police Station from three different directions. This entire building is terraced (Madras Terraced) with tiled verandah in the front and back.

3. All the three streets which meet at the point, where the Police Station is situate, are narrow with number of small houses and huts. In these streets there are many lanes. In other words, the Police Station is situate in a thickly crowded locality, consisting of mainly lower middle class, and lower class people. If one passes by the side of the Police Station in these streets, normally it may not be possible to note as to what is taking place inside of the Police Station, much less in the lock-up room in it. There is a big name board of the Police Station hanging in front on the western side, which practically hides the view of the lock-up room from outside. This name board is 6 feet 1 inch in length and 1 foot 3 inches in width.

4. In the lock-up room, there is no electric light nor any provision for the same, though the entire building is provided with electrical fittings, such as lights and fan. I am told that no electrical provision is provided inside the lock-up room so that those who are locked up in it would not use it adversely. The only door-way in the lock-up room can be locked only from outside. The provision for locking from inside has been removed. But in the frame of the door way on its eastern side there is a 'J' shaped hook which still remains in tact. This hook in the door-way and the iron bar in the window are said to have been utilised for tying the two ends of a saree while the door-way was locked from outside. In this connection it may not be stated that this building has been rented out for use as Police Station and before that it was a residential one.

5. There is only one window in the lock-up room. It is in the southern wall opposite to the door way. The only ventilator in this room on the west is more than 6 feet in height from the ground level. Apart from this, it is fixed with wiremesh from inside and the iron bars in this ventilater are outside the wiremesh.

6. The window of the lock-up room has been separately shown by me in my rough plan No. 2. This window is also fixed with a wiremesh as in the case of the ventilator, but it has been done so from outside. Hence, the iron bars in it can be reached by hand from the lock-up room. There is a gap of 1.25 c.m. between the wiremesh and the iron bars in the window. The distance between each iron bar in this window is $5\frac{1}{2}$ c.m. The base of the window is 2 feet 5 inches above the ground level. There is no door for this window and the four doors in it appear to have been removed.


7. There are two holes near to each other with a diameter of $1\frac{3}{4}$ inches in the door way of the lock-up room. These two holes are 4 feet above the ground level. From the western pial in the front verandah, the lock-up room can be looked into through the above said southern window in it. In this varandah an electrical light has been provided facing the window from north so that electric light may fall into the lock-up room from outside.

8. At the time of inspection a nylon saree was brought. We tied its one end in the bar of the window of the lock-up room and the other end of it in the hook of the door way as seen in M.O. 2 series (photographs filed and marked at the time of the enquiry). It is found that a saree could easily be tied at both these ends without difficulty. In my opinion M.O. 3 saree which is said to have been used at the time of the occurence can also be tied at these two ends without difficulty. There is a gap of one centemeter horizontally between the door-way and the hook after closing the door-way and locking it from outside. Apart from this, there is little gap vertically between this hook and the edge of the door-way. Suffice it for me to point out that a saree like M.O. 3 can be easily tied at the above said two ends when the door of the lock-up room is closed and locked from outside. After tying the same as stated above, the door can be opened from outside with hard pushing. A thick thread was also tied at the above said two ends in a tight position and measurements were taken. In doing so, it is found that its height touching the window is 4 feet $11\frac{1}{2}$ inches in height from ground level ; at the centre 3 feet 5 inches. In other words, the thick thread was found slopping towards north with a maximum height of 4 feet $11\frac{1}{2}$ inches and minimum of 3 feet 5 inches from the ground level.

9. The lock-up room has been kept quite neat as in the case of other rooms in the Police Station. The Sub-Inspector (Crimes) and Sub-Inspector (Law and Order) have their seats as shown in plan No. 1. There is a small table on the west adjoining the seat of Sub-Inspector (Law and Order) where the Telephone is placed. The wireless provision is at the north-eastern corner of the hall which is 6 feet 9 inches away from the eastern end of the door-way in the lock-up room. There is a ceiling fan at the centre of the hall. On the eastern pial in the front varandah, there is a steel almerah as shown in the plan. Except for the name board in the front, there is no indication with any colour washing to show that this building is a Police Station. The front door of the Police Station is 5 feet 7 inches in height and 2 feet 5 inches in width. The door of this door-way is a wooden frame with iron bars. On either side of this door-way there is a wooden frame with iron bars above the parapet walls. The height of this frame with iron bars is 3 feet $8\frac{1}{2}$ inches. The height of this frame with iron bars from the ground level is the same as that of the front door-way. The height of the parapet wall is 1 foot $10\frac{1}{2}$ inches.


(Sd.) ———

One man Commission.



ABCDEFGH=Police Station; T=Table; T.L.=Telephone; A=Almirah; S.A=Steel Almirah; D=Door; W=Window; V=Ventilator; ☼=Electric Light in the roof facing Lock-up room; C.F.=Ceiling Fan


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



Shows the place where one end of the saree was tied at the time of inspection

Rough plan no. 2


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMILNADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

சேலம் நகர கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் காவலில் வைக்கப்பட்டிருந்த தெய்வமணி என்கிற குள்ளுண்டு 15–3–1983 அன்று இறந்துபோனது பற்றி '' ஒரு நபர் கமிஷன் '' நடத்திய விசாரணையின் நாட் குறிப்புகள்.

30–5–1983—ஒரு நபர் கமிஷன் பொருப்பு ஏற்றுக் கொள்ளப்பட்டு, வேலை துவங்கப் பட்டது. அன்றே " The Hindu " (Coimbatore Edition) " Indian Express " (Madurai Edition), '' மாலை முரசு '', ''தினத்தந்தி '', '' தினமலர் '', '' மாலை மலர் '' ஆகிய பத்திரிகைத் தாள்களில் கமிஷன் முன்பாக 13–6–1983ஆம் தேதிக்குள் பிரமாணப் பத்திரிகைகள் தாக்கல் செய்யும்படி அறிவிப்பு செய்யப்பட்டது. அன்றே சேலம் மாவட்ட ஆட்சியாளருக்கு இவ்வழக்கு சம்பந்தப்பட்ட எல்லா ஆவணங்களையும் கமிஷனுக்கு அனுப்பி வைக்கும்படி கடிதம் எழுதப்பட்டது. அதன் பின்னர் சேலத்தில் பல இடங்களைப் பார்வையிட்டு கமிஷன் விசாரணை நடத்த தகுந்த இடம் தேடப்பட்டது.

31-5-1983 மற்றும் 1-6-1983 — சேலத்தில் தொடர்ந்து பல இடங்களைப் பார்வை யிட்டு, கடைசியாக சேலம் மத்திய கூட்டுறவு பேரவைக் கட்டிடத்தில் உள்ள '' மீட்டிங் ஹாலில் '' கமிஷன் விசாரணையை நடத்துவதாக தீர்மானிக்கப் பட்டு அதற்கு வேண்டிய எல்லா ஏற்பாடு களும் செய்யப்பட்டன. அதன் பின்னர் அடுத்த விசாரணை 15–6–1983 ஒத்திப் போடப்பட்டது.

15–6–1983—மொத்தம் 18 நபர்களிடமிருந்து பிரமாணப் பத்திரிகைள் கிடைக்கப் பெற்றன. அவைகளை பார்வையிட்டு பெற்று, சேலம் மாவட்ட கண்காணிப் பாளருக்கு கிச்சிப்பாளையம் காவல் நிலையத்திலும் அவரிடத்திலும் உள்ள வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை கமிஷனுக்கு அனுப்பி வைக்கும்படி கடிதம் எழுதப்பட்டது. பிரமாணப் பத்திரிகை தாக்கல் செய்தவர்களுக்கும், கிச்சிப் பாளையம் காவல் நிலையத்தில் 15–3–1983 அன்று இருந்தவர்களுக்கும், கமிஷன் விசாரணைக்கு ஆஜர் ஆகும்படி உத்திரவிட சம்மன்களை தயார் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது. பிறகு விசாரணை 16–6–1983 தேதிக்கு தள்ளிப் போடப் பட்டது.

16–6–1983—சம்மன்களும் கமிஷன் சீல்களும் தயார் செய்யப்பட்டன. விசாரணைக்கு வேண்டிய ரிஜிஸ்டர்கள் சேலம் மாவட்ட நீதிபதியிடமிருந்து கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டன.

17–6–1983—பிரமாணப் பத்திரிகைள் தாக்கல் செய்தவர்களுக்கும், காவல் நிலையத்தில் இருந்ததாகச் சொல்லப்பட்ட காவலர் களுக்கும், உதவி ஆய்வாளர்களுக்கும், டாக்டர் சியாமளாவுக்கும் சம்மன்கள் அனுப்பப்பட்டன. அவர்கள் 27–6–1983 அன்று காலை 11 மணியளவில் சேலம் மத்திய கூட்டுறவு வங்கியில் உள்ள '' மீட்டிங் ஹாலில் '' கமிஷன்முன் ஆஜர் ஆக உத்திரவு இடப்பட்டார்கள். சேலம் ஆர்.டி.ஒ. விடமிருந்து 1 முதல் 250 பக்கங்கள் கொண்ட கோப்பு கிடைக்கப் பெற்று பரிசிலனை செய்யப்பட்டது. கமிஷன் விசாரணை 27–6–1983-க்கு ஒத்திப் போடப்பட்டது.

27–6–1983 —மொத்தம் 25 நபர்களுக்கு சம்மன் அனுப்பப்பட்டு, 23 நபர்களுக்கு சம்மன்கள் சர்வு செய்யப்பட்டது. 23 நபர்கள் ஆஜர் ஆனார்கள். திருவாளர்கள் பி.வி. கோவிந்தராஜ மற்றும் பி. வி. சினிவாசன், சாட்சிகள் அர்த்தனாரி, பேச்சியம்மாள், கோட்டைமாரி, மொட்டையாண்டி, சத்தார் ஆகியோர் களுக்கு வக்காலத்து தாக்கல் செய்தார்கள். சாட்சிகள் பெருமாள், ரங்கசாமி, கணேசன் ஆகியோர்கள் வழக்கைத் தள்ளிப்போட வேண்டுமென்றும் தங்களுக்கு வக்கீல் வைத்து வழக்காட வக்கீல் நியமிக்க அனுமதி வழங்கவேண்டுமென்றும் இரு விண்ணப்பங்கள் தாக்கல் செய்தார்கள். அவர்கள் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டு அனுமதி செய்யப்பட்டன. விசாரணை 16–7–1983-க்கு ஒத்திப்போடப் பட்டது. ஆஜரானவர்கள் ''பைன்டு ஓவர்' செய்யப்பட்டார்கள். வராத இருவர் களுக்கு மறுபடியும் 16–7–1983 அன்று ஆஜராக சம்மன்கள் அனுப்பப்பட்டன. சேலம் மாவட்ட ஆட்சித் தலைவரிட மிருந்து 1 முதல் 368 பக்கங்கள் கொண்ட கோப்பு கிடைக்கப்பெற்று பார்வையிடப் பட்டது. சாட்சிகள் தாக்கல் செய்துள்ள பிரமாணப் பத்திரிகைகளின் நகல்களும், மற்ற முக்கியமான வாக்குமூலங்கள், ஆவணங்கள் ஆகியவைகளின் நகல்களைத் தயார் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டது.

16–7–1983—சம்மன் அனுப்பப்பட்ட இரு சாட்சிகளும் ஆஜர் ஆகியுள்ளனர். திரு. எஸ். எஸ். ராமநாராயணன் அவர் கள் சாட்சி வசந்தாரத்தின வேலுவுக்காக வக்காலத்து தாக்கல் செய்தார். பிரமாணப் பத்திரிகை நகல் களும், மற்ற வாக்குமூலங்கள், ஆவணங்கள் ஆகியவைகளில் நகல்களும் ஆஜர் ஆகிய எல்லா சாட்சிகளுக்கும் அவர்கள் வக்கில் களுக்கும் கொடுக்கப்பட்டன. சேலம் மாவட்ட கண்காணிப்பாளரிடமிருந்து

1 முதல் 14 ஆவணங்கள் அவருடைய கடிதத்தில் குறித்துள்ளபடி கிடைக்கப் பெற்றன. அன்றே சேலம் இரண்டாம் வகுப்பு நடுவர் எண் 1 அவருக்கு குற்ற எண் 209 47/83—கிச்சிப்பாளையம் காவல் நிலைய ரிக்கார்டுகளை அனுப்பி வைக்க கடிதம் எழுதப்பட்டது. சாட்சிகளை விசாரிக்க விசாரணை 20–7–1983-க்கு ஒத்திப்போடப்பட்டது.

20–7–1983—திருவாளர் ஆர். சீனிவாசன், சாட்சிகள் சந்திரன், அப்புனு, மெய்யழகன், ராமசாமி, சின்னுசாமி மற்றும் மோகன்ராம் ஆகியோர்களுக்கு வக்காலத்து தாக்கல் செய்துள்ளார். ஆர். டி. ஒ.–விட மிருந்து இரு ஆவணங்கள் கிடைக்கப் பெற்றன. மேலும் குற்ற எண் 209 47/83 வழக்குக்கோப்பு கிடைக்கப் பெற்றது. இன்று பி. சா. 1 பேச்சியம்மாள், பி.சா. 2 சத்தார், பி.சா. 3 கோட்டை மாரி ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டனர். எக்ஸிபிட் பி 1 முதல் பி 3, எக்ஸ்பிட் சி1 அண்டு டி1 மார்க்கு செய்யப்பட்டன. விசாரணை 21–7–1983-க்கு ஒத்திப்போடப் பட்டது.

21–7–1983—பி.டப்ள்யு. 4 மொட்டையாண்டி பி.டப்ள்யு. 5 வசந்தா ரத்தினவேலு ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டனர். எக்ஸிபிட் பி4, பி5, பி6, பி7, பி8 அண்டு டி2 மார்க்கு செய்யப்பட்டன. விசாரணை 22–7–1983-க்கு ஒத்திப்போடப்பட்டது.

22–7–1983—பி.டப்ள்யு. 6 செல்லம்மாள், பி.டப்ள்யு. 7 பாலாஜி, பி.டப்ள்யு. 8 ரவி, பி.டப்ள்யு 9 தனபால், பி.டப்ள்யு. 10 சுப்ரமணியம், பி.டப்ள்யு. 11 எல்லம்மாள் ஆகிய சாட்சிகளையும், பி.டப்ள்யு. 5 மீண்டும் தொடர்ந்து விசாரிக்கப் பட்டார்கள். எக்ஸிபிட் பி9, பி10, பி11, பி12 அண்டு டி3 ஆகிய அவணங்களும் எம்.ஒ. 1, 2, 3, 4, 5 ஆகியவைகளும் மார்க்கு செய்யப்பட்டன. அதன்பின் விசாரணை 27–7–1983 தேதிக்கு ஒத்திப் போடப்பட்டது.

27–7–1983—பி.டப்ள்யு. 12 டாக்டர் சியாமளா, பி.டப்ள்யு. 13 அர்த்தனாரி ஆகியோர்கள் விசாரிக்கப்பட்டார்கள். எக்ஸிபிட்ஸ் பி 13 அண்டு பி14 ஆகியவைகள் மார்க்கு செய்யப்பட்டன. விசாரணை 28–7–1983 அன்று ஒத்திப்போடப்பட்டது. ஆர்.டி.ஒ. விடமிருந்து இரு ஆவணங்கள் கடிதத்தில் கண்டுள்ளபடி கிடைக்கப் பெற்றன.

28–7–1983—பி.டப்ள்யு. 14 ஜீவரத்தினம், பி.டப்ள்யு. 15 வெங்கடபதி ஆகியோர் விசாரிக்கப்பட்டனர். பி.டப்ள்யு. 6 மீண்டும் விசாரிக்கப்பட்டார். எக்ஸிபிட் பி.15, பி.16, பி.17, பி.18, பி.19, பி.20, பி.21 மார்க்கு செய்யப்பட்டன. அதன்பிறகு விசாரணை 29–7–1983-க்கு ஒத்திப்போடப் பட்டது.

29–7–1983—பி.டப்ள்யு. 13 மீண்டும் விசாரிக்கப் பட்டார். பி. டப்ள்யு. 16 ராஜசேகர் விசாரிக்கப்பட்டார். எக்ஸிபிட் பி.22 அண்டு பி.23 மார்க்கு செய்யப்பட்டன. பிறகு விசாரணை 11–8–1983 அன்று ஒத்திப் போடப்பட்டது.

11–8–1983—பி.டப்ள்யு. 12 டாக்டர் சியாமளா மறுபடியும் விசாரிக்கப்பட்டார்கள். பி.டப்ள்யு. 17 திரு. வரதராஜு விசாரிக்கப் பட்டார். எக்ஸிபிட் பி 24 அண்டு எம்.ஒ. 6 மார்க்கு செய்யப்பட்டன. இத்துடன் காவலர்களுக்கு எதிராக அளிக்கப்பட்ட சாட்சிகளின் விசாரணை முடிவடைந்தது. காவலர்கள் தரப்பில் சாட்சிகளை விசாரணை செய்ய விசாரணை 12–8–1983 தேதிக்கு ஒத்திப்போடப்பட்டது. காவலர்கள் தரப்பில் முதல் வகுப்பு நடுவர் மன்றத்தில் தாக்கல் செய்துள்ள குற்ற எண் 730/82 கிச்சிப்பாளையம் காவல் நிலைய ஐ.சி. எண் 413/83 வழக்கு சம்பந்தமான கோப்பை வரவழைக்க மனு தாக்கல் செய்து மனு அனுமதிக்கப்பட்டது.

12–8–1983—ஆர்.டபிள்யு. 1 மீனாட்சிசுந்தரம் விசாரிக்கப்பட்டார். எக்ஸிபிட் ஆர் 1 மார்க்கு செய்யப்பட்டது. பிறகு 3–9–1983 தேதிக்கு விசாரணை தள்ளிப் போடப்பட்டது.

3–9–1983—ஆர்.டப்ள்யு. 2 சண்முகசுந்திரம், ஆர்.டப்ள்யு. 3 மோகன்ராம் விசாரிக்கப் பட்டார்கள். எக்ஸிபிட் ஆர். 2, ஆர். 3, ஆர் 4, ஆர். 5, ஆர். 6 ஆகியவைகள் மார்க்கு செய்யப்பட்டன. பிறகு 5–9–1983 தேதிக்கு விசாரணை தள்ளிப்போடப் பட்டது.

5–9–1983—ஆர்.டப்ள்யு. 1 அண்டு 3 மீண்டும் விசாரிக்கப்பட்டார்கள். ஆர்.டப்ள்யு. 4 பெருமாள் விசாரிக்கப்பட்டார். எக்ஸிபிட் ஆர் 7 மார்க்கு செய்யப்பட்டது. பிறகு 7–9–1983 தேதிக்கு விசாரணை தள்ளிப் போடப்பட்டது.

7–9–1983—ஆர். டப்ள்யு. 5 ரங்கசாமி, ஆர்.டப்ள்யு. 6 சந்திரன் விசாரிக்கப் பட்டார்கள். இத்துடன் காவலர்கள் தரப்பில் அளிக்கப்பட்ட சாட்சிகள் முற்றுப் பெற்றன. பிறகு 19–9–1983 தேதிக்கு 'argu m nt'-டுக்காக விசாரணை தள்ளிப்போடப்பட்டது. சாட்சிகளின் நகல் காப்பிகள் கொடுக்க வேண்டிய ஏற்பாடு செய்யப்பட்டது.

19–9–1983—வழக்கறிஞர்களின் வாதமும், சாட்சிகளின் வாதமும் முழுமையாக கேட்கப்பட்டது. இத்துடன் கமிஷன் விசாரணை முடிந்ததாக அறிவிக்கப்பட்டு, விசாரணை அறிக்கை தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்படும் என்று தெரிவிக்கப் பட்டது.

30–9–1983—ஒரு நபர் கமிஷன் அறிக்கை தமிழக அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டு, ஒரு நபர் கமிஷன் அலுவல் முடிவு பெற்றது. தமிழக அரசுக்கு அறிக்கை பதிவு தபாலில் அனுப்பப்பட்டது. மற்ற கோப்புகள் அனைத்தும் சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு சீல் வைத்து அனுப்பி வைக்கப்பட்டது.

(ஒம்) நஞ்சப்பன்,
ஒரு நபர் கமிஷன்.

©
தமிழ் நாடு அரசு
1984

பொதுத் (சட்டமும் ஒழுங்கும்--அ) துறை.

அரசாணை நிலை எண் 232, 18 பிப்ரவரி, 1984.

(மாகி 6, ருத்ரோத்காரி, திருவள்ளுவர் ஆண்டு 2015.)

சட்டமும் ஒழுங்கும்—சேலம் கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் 1983ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 15-ம் நாளன்று தெய்வமணி என்ற ஆதிதிராவிடப் பெண் இறந்தது குறித்து விசாரணை—திரு. ஏ. எம். நஞ்சப்பன் ஆணைக்குழுவின் அறிக்கை—முடிவுகள் ஏற்கப்படுகின்றன—ஆணை வெளியிடப்படுகிறது.

பார்வை :—

1. அரசாணை நிலை எண். 746, பொதுத் (சட்டமும் ஒழுங்கும்—அ) துறை, நாள் 10-5-1983.

2. திரு. ஏ. எம். நஞ்சப்பன் ஆணைக்குழுவின் 30-9-1983 நாளிட்ட கடிதம்.

ஆணை :—

சேலம் கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் 1983-ம் ஆண்டு மார்ச் திங்கள் 15-ம் நாளன்று தெய்வமணி என்ற ஆதிதிராவிடப் பெண் இறந்தது குறித்து விசாரணை செய்ய பார்வையில் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையில் 1952-ம் ஆண்டு ஆணைக்குழு சட்டத்தின்கீழ் ஓய்வுபெற்ற மாவட்ட நீதிபதி திரு. ஏ. எம். நஞ்சப்பன் அவர்களை ஒரு நபர் ஆணைக்குழுவாக அரசு நியமித்தது. ஆணைக்குழுவின் ஆய்வு வரம்பு வருமாறு :—

(i) 15-3-1983 அன்று சேலம் மாவட்டம் கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் ஆதிதிராவிடப் பெண் செல்வி தெய்வமணி இறந்ததற்கான சூழ்நிலைகள், காரணங்கள் பற்றியும் இதில் காவல் துறையினரின் பங்கு என்ன என்பது பற்றியும் விசாரணை செய்தல்.

(ii) 15-3-1983 அன்று கிச்சிப்பாளையம் காவல் நிலையத்தில் தெய்வமணி இறப்பதற்குமுன் அப்பெண் கற்பழிக்கப்பட்டாள் என்ற குற்றச்சாட்டு உண்மைதானா என்று கண்டறியவும், அப்படி உண்மையென்றால் கற்பழிப்புக் குற்றத்தைச் செய்த நபர்களைக் கண்டறிதல்.

(iii) இனிமேல், இதுபோன்ற காவல் பொறுப்பில் மரணம் ஏற்படும் நிகழ்ச்சிகள் நடைபெறாவண்ணம் தடுக்கும் பொருட்டு எடுக்க வேண்டிய வழிமுறைகளைப் பரிந்துரை செய்தல்.

2. தன்முன் அளிக்கப்பட்ட பல்வேறு சாட்சியங்களின் வாக்குமூலங்களை ஆய்ந்து பார்த்த விசாரணைக்குழு மேற்கண்டவாறு தனது கருத்துக்களை தெரிவித்துள்ளது :—

(i) 15-3-1983 அன்று காலை சுமார் 6 மணியளவில் சேலம் கிச்சிப்பாளையத்தில் உள்ள கஸ்தூரிபாய் தெருவில் வசித்து வந்த திருமதி பேச்சியம்மாளின் வீட்டில் 6 எவர்சில்வர் டம்ப்ளர்களும், ஒரு எவர்சில்வர் தட்டும் மற்றும் ஒரு எவர்சில்வர் பாத்திரமும் காணாமல் போனது தொடர்பாக அதே தெருவில் 10 வீடுகள் தள்ளி வசித்து வந்த சுமார் 19வயதுள்ள தெய்வமணி என்ற திருமணமாகாத பெண் கிச்சிப்பாளையம் காவலர் [redacted] கைது செய்யப்பட்டு காவல் நிலையத்தில் உள்ள லாக்கப் அறையில் அடைக்கப்பட்டிருக்கிறாள். சாட்சிகளின் சாட்சியங்களிலிருந்தும், ஆவணங்களிலிருந்தும் தெய்வமணி தானாகவே புடவையைக் கழுத்தில் சுற்றித் தொங்கி மூச்சடைப்பின் காரணமாக இறந்திருப்பாள் என்ற முடிவிற்கு தீர்மானமாக வரமுடியாத நிலை உள்ளது.

(ii) தெய்வமணிக்கு மரணம் ஏற்பட்டதற்கு யார் காரணமாக இருந்தார்கள் என்று எதுவும் சற்றேனும் புலனாகவில்லை. தெய்வமணிக்கு எவ்வாறு, எப்படி, எங்கு தீங்கு விளைவிக்கப்பட்டது என்று காட்டவும் சாட்சியம் அதுவும் கமிஷன் முன்பு அளிக்கப்படவில்லை. ஆகவே தெய்வமணி இறப்பதற்கு முன்பு கற்பழிக்கப்பட்டாளா என்றும், யாரால் அவ்வாறு கற்பழிக்கப்பட்டாள் என்று தீர்வு காண முடியாத நிலை உள்ளது.

(iii) 15-3-1983 அன்று தெய்வமணிக்கு பெண் நபர் ஒருவர் உதவியாக இல்லாத தால் தான் இத்தகைய ஒரு சூழ்நிலை ஏற்பட வாய்ப்பு ஏற்பட்டிருப்பதாக தெரிகிறது. ஆகவே, ஒவ்வொரு காவல் நிலையத்திலும் பெண் அல்லது பெண்கள் காவலில் இருக்கும்போது கண்டிப்பாக ஒரு பெண் நபர் துணைக்கு காவலாக எப்போதும் இருக்க வேண்டியது அவசியமாக இருக்கிறது. அவ்வாறு ஏற்பாடு செய்ய இயலாமல் போய்விட் டால் பெண் காவலர்கள் இருக்கும் இடத்திற்கு காவலுக்காக தெய்வமணி போன்ற கைதிகளை அனுப்பி காவலில் இருக்கும்படி செய்யலாம். இது சம்பந்தமாக காவல் நிலையாணைகளில் பெண்களுக்கு வேண்டிய பாதுகாப்பு அளிக்க வழி வகுக்க வேண்டும். முடிவாக, தெய்வமணி சந்தேகப்படும் சூழ்நிலையில் காவல் நிலையத்தில் காவலில் இருக்கும்பொழுது இறந்திருக்கிறாள் என்று தெரிவதால் அரசு இதுபற்றி ஒரு பொறுப்புள்ள நேர்மையும், திறமையும் வாய்ந்த உயர்மட்ட காவல்துறை அதிகாரியை நியமித்து தீவிர புலன் விசாரணை செய்து உண்மையை அறிய வேண்டியது அவசிய மாகவும், நியாயமாகவும் இருக்கிறது என்றும், தீவிர விசாரணைக்கு பிறகு இது சம்பந்தமாக தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டியது அவசியம் என்றும் விசாரணைக்குழு பரிந்துரை செய்துள்ளது.

3. ஆணைக்குழுவின் பரிந்துரையினை ஏற்று, குற்றப்பிரிவு புலனாய்வுத்துறையின் தீவிர விசாரணைக்கு அரசு உத்திரவிட்டுள்ளது. குற்றப்பிரிவு புலனாய்வுத் துறையிட மிருந்து அறிக்கை பெறப்பட்டவுடன், அறிக்கையின் அடிப்படையில் தகுந்த நடவடிக்கை எடுக்க அரசு முடிவெடுத்துள்ளது.

(ஆளுநரின் உத்தரவுப்படி)

கு. சொக்கலிங்கம்,
தலைமைச் செயலாளர்.

பெறுநர்:

மாவட்ட ஆட்சித் தலைவர், சேலம்.
காவல் துறை இயக்குநர், சென்னை-4,
அரசுச் செயலாளர், உள்துறை.

நகல்:—

முதலமைச்சரின் செயலாளர், சென்னை-9.
காவல்துறை துணைத் தலைவர் (குற்றப் பிரிவு புலனாய்வுத்துறை), சென்னை-4.
சட்டத் துறை, சென்னை-9.


தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS



தமிழ்நாடு அரசு மந்திய அச்சகம், சென்னை-79.